விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (13.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298

# படைக்கான பணி முடிந்துவிட்டது

# எனது இறுதி உரையும் இதுவே

## 60ஆவது ஆண்டு விழாவில் ஜெனரல் சரத் பொன்சேகா



(கொழும்பு)

தரைப்படைக்கான தனது கடமையும் பொறுப்புகளும் முடிபடைந்து விட்டதாக அதன் முன்னாள் தளபதியும் தற்போது படைகளின் முதன்மை தளகர்த்தாவாகப் பணியாற்றுபவருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## வலி. உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீள்குடியேற்றப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் கே.கே.எஸ். வீதிக்கு மேற்குப் புறமாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வரை விரைவில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டவுள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வலிகாமம் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் யாழ்.- கே.கே.எஸ்.வீதிக்கு மேற்குப் புறமாக மக்களை மீள்குடியேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்கு முன்னர் (14ஆம் பக்கம் பார்க்க)

## பருவ மழையால் முகாம் மக்களுக்கு பாதிப்பு! மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கை

### அரசு அதனை அடியோடு நிராகரிப்பு! அல்ஜெசீரா தெரிவிப்பு

(வவுனியா)

பருவமழை தொடங்க உள்ள நிலையில் முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் உயிர்களுக்கு ஆபத்து என மனித உரிமைக் குழுக்களும் தொண்டு நிறுவனங்களும் விடுத்த எச்சரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாக அல்ஜெசீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பருவ மழையை எதிர்கொள்வதற்கு முகாம்கள் தயாராக இருக்கின்றன என மனித உரிமைகள் மற்றும் பேரிடர் முகாமைத்துவ அமைச்சு செயலாளர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்தார் எனவும் அல்ஜெசீரா கூறியுள்ளது.

சுமார் மூன்று இலட்சம் மக்கள் வன்னியிலுள்ள தடுப்பு (14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சோதனை 3 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளிய எட்டியாவத்தை பிரதேசங்களில் நேற்றுக் காலை இடம் பெற்ற தேடுதல் சோதனை நடவடிக்கையில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்குளியவில் இடம்பெற்ற வீதி சோதனை நடவடிக்கையின்போது இரண்டு இளைஞர்களும் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை முதல்வர், பிரதி முதல்வர் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ். மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அனைவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து தமது பதவிகளை ஏற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாநகர முதல்வராக திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் பிரதி முதல்வராக துரைராஜா இளங்கோவும் ஏனைய உறுப்பினர்களான முருகையா கோமகன், மனுவல் மங்களநேசன், மொகமட் ரமீஸ், கிரேசியன், மீராசாகிப் முஸ்தபா, மாணிக்கம் கனகரட்ணம், சுந்தர்சிங் விஜயகாந்த், றூமி பதுர்தீன் அஜ்மீன் அஸ்பர், சுவிகரன்நிசாந்தன், அந்தோனிப்பிள்ளை கிளாபோடேசியஸ் ஆகியோருடன் சுயேட்சைக் குழு ஒன்று சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சுல்தான் சுபியான் (14ஆம் பக்கம் பார்க்க)



## தீவகத்தைச் சேர்ந்த 657 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்

### நாளையும் வந்து சேருவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த 174 குடும்பங்களைச் சேர்ந்த 657 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட தீவகத்தைச் சேர்ந்தவர்களில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 407 பேர் வேலணை இடைத்தங்கல் முகாமிலும் 62 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் காரைநகர் இடைத்தங்கல் முகாமிலும் நேற்று தற்காலிகமாக தங்கவைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில்யாழ். அரசஅதிபர்க.கணேஷ் மேலும் தெரிவிக்கையில்,

வேலணை இடைத்தங்கல் முகாம்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் நெடுந்தீவை (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கும் விரைவில் தேர்தல்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களின் பதவி ஏற்புவைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில்,

யாழ். மாநகர சபைத்தேர்தல் நடத்தப்பட்டு தற்போது முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களாக பொறுப்பேற்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கும் விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும். வடபகுதியில் ஜனநாயக பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமாயின் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். எனவே வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்து (14ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசின் செல்வாக்குச் சரிகின்றது ஜே.வி.பியின் ஆதிக்கம் எழுகிறது

## இதுவே தென் மாகாணத் தேர்தலின் முடிபாம்

(கொழும்பு)

அரசியல் களத்தில் அரசின் செல்வாக்குப் படிப்படியாகச் சரிந்துவர ஜே.வி.பியின் ஆதிக்கம் அதிகரித்து வருவதையே நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இனிவரும் தேர்தல்கள் அரசுக்கு இலகுவாக இருக்காது என ஜே.வி.பி கூறியுள்ளது.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் ஒரு திருப்புமுனை எனக் கூறிய கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாட்டின் எதிர்கால அரசியல் போக்கை வெளிச்சமிட்டுக் காட்டியவர்களாக தெற்கு மக்கள் இருக்கின்றார்கள்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகளைவிட இந்தத் தேர்தலில் அது 25,491 வாக்குகள் குறைவாகவே பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோட்டை என்று கருதப்படுகிறது. அங்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இம்முறை 9 ஆயிரத்து 995 வாக்குகளை இழந்துள்ளது.

அதேசமயம் ஜே.வி.பி தனது வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொண்டதோடு அந்த மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டும் இருக்கின்றது.

மிக மிகச் சிக்கலான நிலையிலும் கூட கட்சியால் தனது நிலைப்பாட்டை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ள முடிந்துள்ளது. பரப்புரை நடவடிக்கையின் போது நாம் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்பட்டு வந்தோம்.

எமது வேட்பாளர்கள் பலர் செய்யாத குற்றங்களுக்காக நீதிமன்றங்களுக்கு அலைக்கழிக்கப்பட்டார்கள்.

அண்மையில் நடத்தப்பட்ட ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் ஆளும் கூட்டணியானது தென்மாகாண சபைத் தேர்தலில் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளது.

மொனறாகல மாவட்டத்தில் 81 வீத வாக்குகளைப் பெற்று, ஊவா மாகாண சபைத் தேர்தலில் 70 வீத வாக்குகளைக் குவிக்க முடிந்த அரசால் இம்முறைத் தேர்தலில் 67 வீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்துள்ளது.

வாக்களிப்பு நாளில்கூட தன்னால் முடிந்த அனைத்து அதிகாரங்களையும் அரசு பயன்படுத்தியும் கூட அது பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இந்தத் தேர்தல் முடிபுகள் மூலம் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நாட்டின் அரசியலமைப்பைத் திருத்தும் ஜனாதிபதியின் யோசனை தோல்வி அடைந்துள்ளது.

எனவே எதிர்காலத் தேர்தல்கள் அரசுக்கு இலகுவாக இருக்கப்போவதில்லை. அரசின் நடவடிக்கைகளால் சிறுபான்மையினரும் கூட அரசைவிட்டு வெளியேறி வருகின்றார்கள். இவ்வாறு ரில்வின் சில்வா தெரிவித்தார். (ந-5)

## பொதுத் தேர்தலை நடத்துமாறு அமைச்சர்கள் சிலர் அழுத்தம்

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்து எச்சரிப்பை வெளிப்படுத்தியுள்ளதால் வரவு செலவு திட்டத்திற்கு மாற்றீடாக சமர்ப்பிக்கப்பட உள்ள குறை நிரப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதனை நிறை வேற்றிய பின்னர் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்துமாறு அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளனர்.

போரில் வெற்றியீட்டிய கோஷத்தை தொடர்ந்தும் முன்வைத்து தேர்தலில் போட்டியிடுவது எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு 'வாய்ப்பாக அமையாது எனவும் பொருளாதார பிரச்சினைகள் குறித்து மக்கள் நாளுக்கு நாள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதாகவும் இந்த நிலைமையில் பொருளாதாரப் பிரச்சினை உக்கிரமடையும் முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது சிறந்தது என அமைச்சகள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# ஜனாதிபதி ராஜபக்ஷ மீதான நம்பிக்கையே தமிழக எம்.பிக்களின் இலங்கை வருகை

## அமைச்சர் ரோஹித போகொல்லாகம கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி ராஜபக்ஷ மீதான இந்தியாவின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழக குழுவினரின் வருகை அமைந்துள்ளது என்று இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ரோஹித போகொல்லகம கூறியுள்ளார்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பல்வேறு முகாம்களில் உள்ளனர். அவர்களின் நிலைமையை நேரில் ஆய்வு செய்வதற்காக எம்.பிக்கள் குழுவினர் கடந்த 10ஆம் திகதி கொழும்புக்கு வந்தனர்.

இலங்கை தமிழர்களுக்கு இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களைப் பற்றி நேரில் பார்வையிட ஐந்து நாள் பயணமாக அவர்கள் இங்கு வந்திருந்தனர்.

இந்நிலையில் தமிழக எம்.பிக்கள் குழுவினரின் வருகை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லகம,

ஜனாதிபதி ராஜபக்ஷ மீதான இந்தியாவின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழக குழுவினரின் வருகை அமைத்துள்ளது.

இலங்கை அரசின் உள்ளூர் மற்றும் வெளியுறவுக் கொள்கை வெளிப்படையாக உள்ளதை சர்வதேச சமுதாயம் பாராட்டி வருகிறது.

எனவே சர்வதேச ராணுவ கோர்ட்டிலோ அல்லது விசாரணைக் குழு முன்போ இலங்கைத் தலைவர்களை நிறுத்துவதோ அல்லது போர் ஹீரோக்களை நிறுத்துவதோ இயலாத காரியமாகும்.



இது தொடர்பான எந்த சட்ட ஒப்பந்தத்திலும் இலங்கை கையெழுத்திடவில்லை. 2002 ஆம் ஆண்டு இது போன்ற ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்தது ஆனால் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதில் கையெழுத்திட மறுத்து விட்டார்.

ஆனால் அப்படியொன்று நடந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரை சர்வதேச சமுதாயத்தின் முன்பு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருக்க முடியும்.

ஆனால் ரணில விக்கிரமசிங்க இப்போது இராணுவ நீதிமன்றம் முன்பு இலங்கைத் தலைவர்களை நிறுத்த வேண்டும் என்கிறார். இப்படிக் கூறியதன் மூலம் நமது வீரர்களை அவர் அவமதித்து விட்டார்.

கடந்த எட்டுத் தேர்தல்களில் ஜனாதிபதி ராஜபக்ஷ தொடர்ந்து வெற்றிபெற்று வந்திருக்கிறார். இதன் மூலம் அவர் போகும் பாதை சரியானதென்பது நிரூபணமாகியுள்ளது. அவரது நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரித்து வருகின்றனர். இது தென் மாகாணத் தேர்தல் முடிபிலும் எதிரொலித்துள்ளது. (ந-5)

## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கருத்தரங்கு இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் இன்றும் நாளையும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன உதவிப் பொதுமுகாமையாளர் ஹர்சா சமரநாயக்க, பயிற்சி முகாமையாளர் அவ்வி முகமட் மற்றும் மகேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள பணிப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் பி.சத்தியுன் கேட்டுள்ளார். (ந-273)

# வவுனியா அரச அதிபரை அதட்டினார் டி.ஆர்.பாலு

வவுனியா அரசாங்க அதிபர் பீ.எஸ்.எம். சாள்ஸை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு கடுமையாக சாடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்க அதிபரை கடுமையான சொற்களினால் பாலு திட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தியப் பிரதிநிதிகள் குழுவின் விஜயத்தில் தலையீடு செய்ய வேண்டாம் என கடுமையான தொனியில் சாள்ஸை அவர் திட்டினாதாகவும் இதனால் சாள்ஸ் மிகவும் வேதனையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் குறித்து மத்திய நாடாமன்ற உறுப்பினர் கனிமொழி, சாள்ஸிடம் மன்னிப்புக் கோரியதாகவும் பாலு அதனைப் பொருட்படுத்தவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

பிரதிநிதிகள் குழுவின் விருப்பத்திற்கு ஏற்றவாறே தாம் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டதாக அரசாங்க அதிபர் சாள்ஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

# யாழ்.மாவட்ட பல்துறைசார் பிரதிநிதிகள் இன்று பசில் ராஜபக்ஷவைச் சந்திப்பர்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் பல்துறைசார்ந்தவர்கள் இன்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளனர்.

யாழ்.மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது யாழ்.மாவட்டத்தின் பல்.துறைசார் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு நேரில் எடுத்துக் கூறுவதற்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து பல்துறைகளையும் சார்ந்த 205 பேர் நேற்று முன்தினம் கொழும்புக்கு சென்றிருந்தனர்.

எனினும் நேற்றைய தினம் இச்சந்திப்பு இடம்பெறவில்லை. இதேவேளை,

ஜனாதிபதியின் விஷேட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவை யாழ்.மாவட்ட பல்துறை சார்ந்த பிரமுகர்கள் இன்று மாலை சந்தித்து கலந்துரையாடுகின்றனர்.

இதன் போது யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரிடம் முன்வைக்கப்படவுள்ளது. (ந-10)

## வில்லூன்றித் தீர்த்தக் கேணியில் வீழ்ந்த பாலகன் பரிதாப மரணம்

யாழ்ப்பாண வில்லூன்றிக் கேணியில் தவறி வீழ்ந்த நான்கு வயதுப் பாலகன் பரிதாபமாக உயிரிழந்தான். இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளரது. சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் சோபிதன் (வயது 4) என்ற சிறுவனே நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தான்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ். வில்லூன்றி தீர்த்தக் கேணியில் பிரஸ்தாப பாலகனின் பேர்த்தியின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று நண்பகல் நடைபெற்றுள்ளது. இதன் போதே பிரஸ்தாப பாலகன் தீர்த்தக் கேணியில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணப் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ந-9)

## புலமைப் பரிசில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவர்கள் 14பேர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதேவேளை மேலும் 37 மாணவர்கள் நூறு புள்ளிகளிற்கு மேல் பெற்றுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களது பெயர்விபரம் வருமாறு,

இ.சஞ்ஜீவன்(168), க.சஜீபன்(163), த.சாள்ஷன்(161), அ.யதுசன்(158), கா.கபிலன்(151), யோ.கதிர்சா(151), சு.சங்கவி(149), ஸ்ரீ.ஜனுஷயன் (147), வீ.அக்ஷயா(145), ஜெ. சமீனா (145), ஜெ. கேம்நாத் (144), சி.பிரவீனா(144), ஜெ. சபினா(144), ஜெநிவேதா(140). (ந-14)


## காணி விற்பனைக்கு

இணுவில் லக்சுமி தியேட்டருக்கு பின்புறமாக கிணறு, மதிலுடன் கூடிய ஆறு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0778445323

(3487)

## பெயர் மாற்றம்

*சிவன் கோவில் வீதி, பருத்தித்துறை என்ற முகவரியில் வசிக்கும் சிறீஸ்கந்தராசா ஜெயந்திக்குமார் ஆகிய நான் (13.10.2009) இன்று முதல் எனது பெயரை சிறீஸ்கந்தராசா ஜெயந்தர்ராஜ் என மாற்றம் செய்து கொள்கிறேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.*

இங்ஙனம்
S. ஜெயந்திக்குமார்

(C-3472)

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஒரு பெரிய கூட்டம் கூடி இருக்கிறது. அங்கு இயேசுநாதர் பேசிக் கொண்டிருக்கிறார்.

அப்போது அவர் பிரமாண்டமான ஒரு தராசை அந்த மக்களுக்கு காட்டுகிறார்.

அது போன்றதொரு தராசை அந்த மக்கள் அதற்கு முன்பு பார்த்ததே இல்லை. அவ்வளவு பெரிய தராசு அது.

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து இயேசு கிறிஸ்து எடை போடுகிறார். அந்தப் பெரிய தராசு ஆகாயத்திலிருந்து தொங்க விட்டது போல் இருக்கிறது.

அந்தத் தராசின் ஒரு பக்கத்தட்டில் அந்த யூதேயா மலைப் பகுதியையும், கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் இயேசு எடுத்து வைக்கிறார். மலைச் சாரல்களில் வளர்ந்திருக்கும் ஒலிவ் மரங்களையெல்லாம் எடுத்து அவர் அதில் வைக்கிறார்.

மலையடி வாரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டு மந்தைகளை எல்லாம் அதில் அவர் தூக்கி வைக்கிறார். அதுவரையில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் முழுவதையும் அங்கே வைக்கிறார்.

உலகத்தில் இருக்கும் விலையுயர்ந்த எல்லாப் பொருட்களையும் அங்கே வைக்கிறார்.

இவ்வளவையும் இயேசு கிறிஸ்து இடது பக்கத் தட்டிலேயே வைக்கிறார்.

இந்தக் காட்சியை மக்கள் அனைவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர், "இன்னொரு தட்டில் வைப்பதற்கு மீதி எதுவும் இல்லையே" என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத் தட்டிலேயே வைத்தாகிவிட்டது. அவ்வளவையும் ஈடு கட்டும் அளவுக்கு அடுத்தபக்கத் தட்டில் எதை வைக்க முடியும்? எல்லோரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு நாதர் சுற்றுமுற்றும் பார்க்கிறார். பின் பக்கத்திலிருந்த ஒரு சின்னக்குழந்தையை எடுத்து அந்த வலது பக்கத் தட்டில் வைக்கிறார்.

அவ்வளவு தான்!

இடது பக்கத் தட்டு ஆட ஆரம்பித்தது. மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. மிக மிக உயரத்திற்குப் போய்விட்டது. அதிலிருந்த பொருட்களெல்லாம் கீழே விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவுக்கு ஆகிவிட்டது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமானில் முகத்தைப் பார்க்கிறார்கள்.

அப்போது அவர் சொல்கிறார் :

"ஒருவர் தன் ஆன்மாவிற்கு கேடு விளைவித்து உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொள்வதால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்" என்கிறார். (மாற்கு 8:36-37)

இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுயர்ந்தது, விலை மதிப்பற்றது எது என்று கேட்டால், அது மனிதனின் ஆன்மா தான் - குழந்தை உள்ளம் தான். இந்த உண்மையையே மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சியின் மூலம் இயேசுநாதர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்றைக்கு நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்.

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுவதும் புரிந்து கொள்ளவில்லை அதுதான் காரணம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவு திணைக்களத்தினால் புதிய திட்டம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் அவற்றை தொலைத்துள்ளவர்களுக்கும் அதனை வழங்குவதற்கும் ஆட்பதிவு திணைக்களம் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை எதிர்காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்கு கட்டாயமாக்கப்பட இருப்பதனால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.ஜி. தர்மதாஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான வழமையான நடைமுறையின் பிரகாரம் குறிப்பிட்ட பகுதியின் கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாதவர்கள் சரியான திகதிக்கு அண்மித்ததாக ஒரு திகதியை மேலதிக பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அடையாள அட்டைகளை வழங்குவதற்கு திணைக்களம் நாடெங்கிலும் நடமாடும் சேவைகளை நடத்தி வருகின்றது. வடக்கில் உள்ள மக்கள் தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கான திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தர்மதாஸ தெரி வித்தார்.

இதேவேளை க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்ற இருப்பவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் இறுதிநாள் அடுத்த வியாழக்கிழமையுடன் பூர்த்தி அடையவுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

# தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரியிலிருந்து சித்திபெற்ற 10 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**இதில் ஆரம்ப கல்விப் பிரிவிலிருந்து**

கு. மைதிலி (சரசாலை), கா. ஸ்ரீதேவி (கரவெட்டி), குயின்நிர்மலி ஜேம்ஸ் மிராண்டா (மன்னார்), நா. சிவரஞ்சனி (கரவெட்டி), அ. நளாயினி (யாழ்ப்பாணம்), கோ. கோமதி (கரவெட்டி) ஆகிய அறுவரும்,

**ஆங்கிலப் பிரிவிலிருந்து**

ந. அருள்வாகினி (யாழ்ப்பாணம்), சி. நளாயினி (யாழ்ப்பாணம்), அப்துல் குத்தூஸ் மகுறூஸ் (கிண்ணியா), பாத்திமா ரஸ்மி ரசாத் (விஜிதபுர) ஆகிய நால்வரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்றும், நாளையும், நாளை மறுநாளும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனை, வட மாகாணக் கல்வி அமைச்சு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையின் போது தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) சான்றிதழ்கள், கல்விக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை சித்தியெய்திய சான்றிதழ், பிரதேச செயலரிடம் இருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ், இரு நற்சான்றிதழ்கள் ஆகியனவற்றின் மூலப் பிரதியுடன் போட்டோப் பிரதி ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்கப்படுகின்றனர். (ஓ)

# யாழ்ப்பாணத்தில் கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொடுக்கும் புதிய அலுவலகம் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொடுக்கும் புதிய அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த மக்களுக்கு புதிதாக கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கும் தற்போதுள்ள கடவுச்சீட்டுகளை புதுப்பிப்பதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.வி. அபயகோன் தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை கண்டறிவதற்காகத்தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

கொழும்பு பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக மாத்தறை, அனுராதபுரம், கண்டி ஆகிய நகரங்களிலும் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொடுக்கும் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகத்தின் நெருக்கடியை குறைப்பது இதன் நோக்கமாகும். மக்களுக்கு அருகிலுள்ள நகரத்தில் இந்த தேவையை நிறைவேற்றிக் கொள்ள இடமளிப்பது இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு வெளிநாட்டுக் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் தாய், தந்தை இருவரும் அலுவலகத்திற்கு வரவேண்டும் எனவும் அபயகோன் தெரிவித்தார்.

மேலும் மோசடிகளை தவிர்ப்பதும் இதன் மற்றுமொரு நோக்கமாகுமென அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

# இராசி பலன்


*13.10.2009*
*(புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை)*
*தசமி முன்னிரவு 8.21 மணிவரை*
*ஆயிலியம் பின்னிரவு 3.04 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், ரோக நிலை, தொழில் நன்மை, புதிய முயற்சி. |
| இடபம் | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பிரயாண சுகம். |
| மிதுனம் | குடும்ப கவலை, வேலைச்சுமை, முயற்சி தாமதம், கௌரவக்குறைவு. |
| கடகம் | பெரியோர் சந்திப்பு, சயன சுகம், தொழில் நன்மை, விருந்துபசாரம். |
| சிங்கம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படல், பிரயாணம், தனலாபம். |
| கன்னி | இனசனத் தொடர்பு, தொழில் வருமானம், காரிய அனுகூலம், போசன நன்மை. |
| துலாம் | கடின உழைப்பு, நல்ல செய்தி, ஆரோக்கிய நிலை, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | ஆன்றோர் சந்திப்பு, அச்சமான நிலை, திடீர் பயணம், உடல் உழைப்பு. |
| தனுசு | புதிய திருப்பம், எதிர்பாராத பிரச்சினை, ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| மகரம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, நல்ல வரவேற்பு, காரிய சித்தி. |
| கும்பம் | பணவருவாய், சுகவாழ்வு, அதிகாரம், தொழில் முன்னேற்றம். |
| மீனம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, உறவினர் சந்திப்பு, காரிய தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 45 |
| தக்காளி | 90 | 100 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 100 | 120 | 80 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 30 | 40 | 20 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 35 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 45 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 50 |
| பாகற்காய் | 120 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 | 150 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 350 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |



யா/செங்குந்தா இந்துக் கல்லூரியின் பவளவிழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம் ஆகியோர் மங்கல விளக்கேற்று வதையும், மூதறிஞர் சி.சிவசரவணபவன் (சிற்பி), நிக்கொட் நிறுவன மாவட்ட திட்டப் பணிப்பாளர் என்.ஆர்.எஸ். சிவரூபன் ஆகியோர் உரையாற்று வதையும் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 வகுப்புகளில் வரலாறு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

✠✠✠

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 12,13 வகுப்புகளில் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## புதிய தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாலராஜி சமூக வலுவூட்டல் நிறுவனம் உழைப்போம், உழைப்போம், வறுமையை ஒழிப்போம் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இளைஞர், யுவதிகள் மற்றும் மாற்று வலுவுடையோரின் எதிர்காலத்தினை வளமாக்கும் நோக்குடன் தொழிற்பயிற்சிகளை வழங்குகின்றது.

இதில் வீட்டு மின்னிணைப்பு ,மோட்டார் திருத்தல்/சைக்கிள் திருத்தல் என வாசிக்க முடியாத பகுதி இல்லை

## மீளக்குடியமர்ந்த கர்ப்பிணித் தாய்மாருக்கு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் உதவி

## இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு விளக்கத் திட்டம்

### ஜயலத் ஜெயவர்த்தன

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடாக அடக்கு முறை ஆகியன தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு தெளிவு படுத்தத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத்ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடக அடக்கு முறை மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் கண்காணிப்பு நடத்தும் நாடுகளிடம் இலங்கை நிலவரம் குறித்து விளக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய சூழ் நிலை குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் ஜயலத் ஜெயவர்த்தன சுவிட்ஸர்லாந்து மற்றும்பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, உலக நாடாளு மன்றம், பொதுநலவாய நாடுகள் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களுக்கு இலங்கை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன விளக்கமளிக்கவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## இலங்கையின் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு பெண்களை இணைத்துக் கொள்ளத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை குற்றத் தடுப்புப் பொலிஸ் சேவையில் பெண் பணியாளர்களை உள் வாங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதன்படி குற்றத் தடுப்புப் பிரிவில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பதற்கான நடவடிக்கைக்ள் மேற்கொள்ளப் படும் என பொலிஸ் வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகின் பல முக்கிய நாடுகளில் குற்றத் தடுப்புப்பிரிவில் பெண்கள் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றத்தடுப்புத் தொடர்பில் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## நீர்கொழும்புப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் தமது வீட்டில் இருந்த தமிழ் இளைஞர் ஒருவரை தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் இலங்கை குற்றப்புலனாய்வுத் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாக பொலிஸ்தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றப்புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் சுமார் ஒருவருடத்திற்கு முன்பிருந்தே நீர்கொழும்பில் வசித்துவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

## இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கனேடிய தமிழரை விடுவிக்க கோரிக்கை

(கொழும்பு)

தீவிரவாத செயல்களுடன் தொடர்பு படுத்தி கடந்த 5 மாதங்களாக இலங்கை கனேடியர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கனேடிய அரசாங்கம் அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் எனவும் கனேடிய தமிழர் காங்கிரஸ் கோரியுள்ளது.

கொழும்பில் உலக வங்கியின் நிதியிடல் திட்டத்தின் சர்வதேச தொழில் நுட்ப வேலைத் திட்டத்தில் பணியாற்றிய ரட்ணராஜா துசியந்தன் என்ற 35 வயதுடைய தமிழரே கடந்த ஏப்ரல் மாதம் முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள், இலங்கையில் இருந்து கடந்த 1989ஆம் ஆண்டு வெளியேறிய பின்னர் மீண்டும் 2002ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பியுள்ளார்.

எனினும் அவர் தொடர்பில் அந்த காலப் பகுதியில் குற்றச்சாட்டுகள் எவையும் எழவில்லை. இந்த நிலையில் இலங்கையில் வைத்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தற்போது கொழும்பு சிறையில் உள்ள தம்மை விடுவிக்க வேண்டும் எனக் கோரி அவர் கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலையில் கனேடிய அரசாங்கம் அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கனேடிய தமிழர் காங்கிரஸ் கோரியுள்ளது. (ஓ-6)



# இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும்

## தா. பாண்டியன் கோரிக்கை



(நாகப்பட்டினம்)
தமிழகத்தில் அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன்கோரிக்கை விடுத்துள்ளார்.

நாகையில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

தமிழகத்தில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குக் குடியிருப்பு உரிமை வழங்கலாம் என மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்திருப்பது நியாயமானதல்ல.

இந்தியாவில் ஓராண்டு காலம் தங்கியிருந்து எவ்வித குற்றத்திலும் ஈடுபடாமல் இருந்தவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம் என சட்டம் உள்ளது. எனவே இலங்கை அகதிகளுக்குக் குடியுரிமை வழங்க எந்தத் தடையும் இல்லை.

இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை மட்டும் வழங்கினால் அவர்கள் மீண்டும் இலங்கையில் குடியேற முடியாத நிலை ஏற்படும். எனவே இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை அனுமதியை மத்திய அரசு வழங்க வேண்டும். இலங்கை அதிபர் ராஜபக்ஷ கூட இரட்டைக் குடியுரிமை பெற்றவர்தான்.

இந்தியாவில் இரட்டைக் குடியுரிமை வழங்க சட்டம் உள்ளது என்றார். (ஓ-6)

## தென்கடல் பகுதியில் ஆள் இல்லாத இலங்கைப் படகு

மண்டபத்திலிருந்து மீன் பிடிக்க நேற்று முன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் சென்றன. தென்கடல் பகுதியில் ஆள் இல்லாத இலங்கையை சேர்ந்த சிங்கள மொழியில் எழுதப்பட்ட பைபர் படகு மிதந்து கொண்டிருந்தது.

கேட்பாரற்று நடுக்கடலில் மிதந்த பைபர் படகை மண்டபத்தை சேர்ந்த ஹரிராமமூர்த்தி என்பவர் தனது விசைப்படகில் கட்டிகரைக்கு இழுத்து வந்தார்.

மண்டபம் தென் கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகு குறித்து கஸ்டம்ஸ் அதிகாரிகள் கியூ பிரிவு பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ஓ-6)

# தமிழக எம்.பிக்களின் பயணத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைத்தால் மகிழ்ச்சியே

## இந்திய கம்யூனிஸ் கட்சியின் தேசிய செயலர் தெரிவிப்பு

(திருநெல்வேலி)
தமிழக எம்.பி.க்கள் பயணத்தால் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு பெற்றால் மகிழ்ச்சி தான் என இந்திய கம்யூ. தேசிய செயலர் டி.ராஜா தெரிவித்தார்.

தென்காசியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

மத்திய அரசு பொறுப்பேற்று நூறு நாட்கள் ஆகியும் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இலங்கை தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வு ஏற்படுத்த ராஜபக்ஷ விரும்புவதில்லை.

அவர் வன்முறையை விரும்புகிறார். அங்கு தமிழர்கள் முள்வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு மனித உரிமை மீறல் நடப்பது குறித்து ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. சர்வதேச சமுதாயம் கண்டித்துள்ளது.

ஆனால் இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை. இலங்கை தமிழர் மறுவாழ்வுக்காக இந்திய அரசு ஒதுக்கிய 500 கோடி ரூபாய் முறையாக செலவிடப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

தமிழக அரசும் தமது தார்மீக கடமையை செய்யாமல் பொறுப்பை தட்டிக்கழிக்கிறது. ராஜபக்ஷ அழைப்பின் பேரில் செல்லும் எம்.பி.க்கள் இலங்கையின் செயல்பாட்டைத் தான் ஆதரிப்பார்கள்.

உண்மையிலேயே இலங்கை தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைத்தால் மகிழ்ச்சிதான் என்றார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# ஈழத் தமிழர்களின் எரிமலை குமுறலை அணைக்க முடியாது

## வைகோ



(சென்னை)
வன்னி வதை முகாம்களில் இருக்கும் ஈழத் தமிழர்களை விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னை மயிலாப்பூரில் ஈழ தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு பேசுகையில்,

ஈழத் தமிழர்கள் தணலாக உள்ளனர். அவர்களுடைய எரிமலை குமுறலை அணைக்க முடியாது.

பிரபாகரன் ஆவி கூட அதிகாரம் செலுத்த முடியாது என்று ராஜபக்ஷ பேசுகிறார். முள் வேலிக்குள் அடைக்கப்பட்டுள்ள தமிழர் கள் விடுவிக்கப்பட்டு அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

தமிழ் ஈழம் ஒன்றுதான் சரியான தீர்வாக இருக்க முடியும். பிரபாகரன் அழியவில்லை. உரிய நேரத்தில் வருவார். பிரபாகரன் தலைமையில் போராடுவார்கள். தமிழீழம் மலர வேண்டும். தமிழீழத்தை தொடர்ந்து ஆதரிப்போம் என்று மேலும் கூறியுள்ளார். (ஓ-5)

# இலங்கைத் தமிழர்களுக்கு சமஉரிமை பெற்றுத்தர இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

## மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்



இலங்கைத் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை திரும்பவும் அவர்களுக்கு சம உரிமை பெற்றுத் தரவும் மத்திய மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் கூறினார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சம உரிமை பெற்றுத் தர மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எம்.பி.க்கள் குழு இலங்கைக்கு சென்றுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்கியுள்ள முகாம்களில் இந்தக் குழு நேரடியாகச் சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து அரசிடம் அறிக்கை தர உள்ளது.

முகாம்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் விரைவில் அவர்களின் இருப்பிடத்திற்கு செல்ல மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இலங்கைத் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை திரும்பவும் , அவர்களுக்கு சம உரிமை பெற்றுத் தரவும் மத்திய, மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# அணு ஆயுதம் சுமந்து செல்லும் பிருத்வி -2 ஏவுகணை

## இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை



(பாலசோர்)
தரையிலுள்ள ஒரு இலக்கிலிருந்து மற்றொரு தரை இலக்கை துல்லியமாக தாக்கும் வல்லமை கொண்ட பிருத்வி -2 ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சோதனை நடத்தியது. ஐந்து நிமிட இடைவேளையில் இரண்டு ஏவுகணைகள் அடுத்தடுத்து சோதனை செய்யப்பட்டுள்ளன சரியாக நேற்று காலை 10.28 மணிக்கு முதல் ஏவுகணையும் 10.33 மணிக்கு இரண்டாவது ஏவுகணையும் ஏவப்பட்டு சோதனை செய்யப்பட்டன.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பிருத்வி-2 ஏவுகணை ஒரு குறுகிய தூர ஏவுகணையாகும். 9 மீற்றர் நீளமும் 1.1 மீற்றர் அகலமும் கொண்ட இந்த ஏவுகணை 250 கி.மீ. வரை சென்று தாக்கும் வல்லமை கொண்டதாகும். திரவ எரிபொருளில் இயங்கக்கூடிய இந்த ஏவுகணையில் ஆயிரம் கிலோ எடை கொண்ட வெடிகுண்டுகளை பொருத்த முடியும். அணு ஆயுதங்களையும் தாங்கிச் செல்லும் இந்த ஏவுகணைகளை கடலில் பயணிக்கும் கப்பலில் இருந்து கூட தரை இலக்கை தாக்கும் வகையில் ஏவலாம்.

கடந்த 1996ஆம் ஆண்டு இந்தியா முதன் முறையாக பிருத்வி -2 ரக ஏவுகணையை சோதித்து பார்த்து பின் 1999ஆம் ஆண்டு இந்திய விமானப்படையில் இந்த ஏவுகணை சேர்க்கப்பட்டது. தொடர்ந்து ஜூன் 2000 மார்ச் 2001 டிசம்பர் 2001 ஜனவரி 2004 மற்றும் மார்ச் 2004 ஆகிய ஆண்டுகளில் பிருத்வி 2 சோதித்துப் பார்க்கப்பட்டது.

கடைசியாக கடந்த 2006ஆம் ஆண்டு வெற்றிகரமாக பிருத்வி சோதித்துப் பார்க்கப் பட்டது. இந்தியாவிடம் இது வரை 70 பிருத்வி -2 ரக ஏவுகணைகள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 10 முதல் 30 ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பிருத்வி-2 ஏவுகணை ஒரிசாவிலுள்ள சண்டிப்பூர் ஏவுகணை சோதனை மையத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. இந்தச் சோதனை வெற்றிகரமாக நடந்தது என அதனை இயக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து பிரம்மோஸ் கே -15 மற்றும் அக்னி -2 ஏவுகணைகளும் விரைவில் சோதிக்கப்படவுள்ளன. (ஓ-6)

# 2014 ஆம் ஆண்டில்

## விண்வெளிக்கு பெண் விஞ்ஞானியை அனுப்ப இந்திய விண்வெளி ஆய்வு மையம் முடிவு

(பெங்களூர்)
2014 ஆம் ஆண்டில் விண்வெளிக்கு முதன் முதலாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) பெண் விஞ்ஞானியை அனுப்ப முடிவு செய்துள்ளது. இந்திய விண்வெளி ஆய்வு மையம் சமீபத்தில் நிலவுக்கு சந்திரயான் விண்கலத்தை வெற்றிகரமாக செலுத்தி நிலவில் தண்ணீர் உள்ளதை உலகிற்கு நிரூபித்து சாதனை படைத்துள்ளது.

இதையடுத்து 2014 ஆம் ஆண்டு விண்வெளிக்கு ராக்கெட் அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் இரு விஞ்ஞானிகளையும் விண்வெளிக்கு அனுப்பி பல்வேறு ஆய்வுகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளது. இரு விஞ்ஞானிகளில் ஒருவர் பெண் விஞ்ஞானியாக இருப்பார்.

இவர் இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்த விஞ்ஞானியாகவே உள்ளவர்களில் ஒருவருக்கு தான் அதிர்ஷ்டம் காத்திருக்கிறது. அப் பெண் விஞ்ஞானி யார் என்பதை இஸ்ரோ இன்னமும் முடிபு செய்யவில்லை.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் கூறுகையில்,

இந்த ரொக்கெட்டின் பாகங்கள் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தில் தயாரிக்கப்படுகிறது. அதன் கட்டுப்பாட்டுக்கான மின்னணு இயந்திரங்கள் பெங்களூரில் உள்ள இஸ்ரோவில் தயாரிக்கப்படுகிறது. பின்னர் இவ்விரண்டும் இணைக்கப்பட்டு விண்வெளிக்கலம் உருவாக்கப்படும்.

இதற்கு 400 முதல் 500 கோடி ரூபாய் வரை செலவு பிடிக்கும். அத்தொகையினை மத்திய அரசு இஸ்ரோவுக்கு வழங்கும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இதற்கான பயிற்சி மையம் ஆரம்பிக்கப்படும் என்றும் இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் தெரிவித்தார். (ஓ-6)

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

**24**

அதன் காரணமாகத் தேவராயன் ஒரிசாவின் மீது படையெடுத்தான் என்று நாம் கருதலாம். ஆனால், போர் தொடங்குவதற்குள் ராஜமகேந்திரவரத்து அல்லாடரெட்டி தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினான். அதன் பின் வெகு விரைவில் அல்லாடரெட்டி இறந்து போனான்.

அவனுக்குப் பின் வந்த அவனுடைய மக்கள் அல்லய வேமனும் வீரபத்திரனும் தங்களுடைய தந்தையைப் போலவே கலிங்கத்தோடு பகைமை பாராட்டுவதன் மூலம் தங்களுடைய செல்வாக்கைப்பெருக்கிக் கொள்ளும் பொதுவான நடைமுறைக் கோட்பாட்டைப் பின்பற்றினார்கள். 1435 ஆம் ஆண்டில் கபிலேஸ்வரன் என்பவன் கலிங்கத்தின் அரியணை ஏறினான்.

அவன் ஆற்றல் மிகுந்த அரசன். எனவே, அவன் ராஜமகேந்திரவரத்தின் மீது படையெடுத்தான்.

அரசியல் துறையிலும் திருமண உறவுகளின் வாயிலாகவும் விஜயநகர அரசர்களோடு தொடர்புகொண்டிருந்த ராஜமகேந்திர ஆட்சியாளர்கள் கபிலேஸ்வர கஜபதியின் படையெடுப்பைச் சமாளிப்பதற்கு இரண்டாம் தேவராயனுடைய துணையை நாடினார்கள். அவனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஒரு படையுடன் சென்று கபிலேஸ்வர கஜபதியை வென்று துரத்தினான்.

ராஜமகேந்திரவரத்திற்கு ஏற்பட்ட ஆபத்து அப்போது நீங்கியது. ஆனால் இரண்டாம் தேவராயன் இறந்தபின் கபிலேஸ்வரன் ராஜமகேந்திரவரத்தைப் பிடித்துக்கொண்டான்.

தேவராயன் சேரலத்தின் மீது படையெடுத்தான். கொல்லத்தரசனும் ஏனைய சிற்றரசர்களும் அவனுக்குப் பணிந்தார்கள். ஆனால், கோழிக்கோட்டில் ஆட்சி செய்து வந்த ஜாமரின் முழு உரிமை பெற்ற அரசனாகவே இருந்தான். அந்தச் சமயத்தில் தென்னிந்தியாவுக்கு வந்திருந்த அப்துர் ரஜாக் என்னும் பெயருடைய பாரசீகத் தூதர் ஜாமரின் தேவராயனுடைய மேலாதிக்கத்திலிருந்த அரசர்களுள் ஒருவன் அல்லன் எனினும்அவன் தேவராயனிடம் மிகுந்த அச்சங் கொண்டிருந்தான் என்றும் பாரசீகத் தூதரைக் கால தாமதமின்றித் தன்னிடம் அனுப்புமாறு தேவராயன் விடுத்த கடிதத்தைக் கண்டவுடனே அவன் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்தான் என்றும் கூறுகிறார். தென்னிந்தியா முழுவதும் தேவராயனுடைய ஆதிக்கத்திலிருந்தது என்பதற்கு அப்துர் ரஜாக் சான்று பகர்கிறார். தேவராயனுடைய ராஜ்யம் இலங்கையிலிருந்த குல்பர்கா வரையிலும் பரவியிருந்தது என்று அவர் எழுதிவைத்திருக்கிறார். தேவராயனுக்குக் கொல்லம், இலங்கை, பழவேற்காடு, பெகு, டெனாசரிம் முதலிய நாடுகள் திறை செலுத்தின என்று நூனிஸ் உறுதியாகக் கூறுகிறார்.

பாமினி ராஜ்யத்துக்கும் விஜயநகர ராஜ்யத்துக்கும் வழிவழி வந்த பகை தேவராயன் காலத்திலும் தொடர்ந்தது. 1436 ஆம் ஆண்டில் இரண்டாம் அலாவுதீன் பாமினி அரியணை ஏறியவுடனே விஜயநகர அரசன் செலுத்தவேண்டிய திறை நிலுவையை வசூல் செய்வதற்காகத் தன் உடன்பிறந்தான் முகமதுவை ஒருபடையுடன் அனுப்பினான்.

தேவராயன் ஒரு பெருந்தொகையை அவனுக்குச் செலுத்தினான். பாமினிப் படைகளோடு விஜயநகரப் படைகள் எப்போது போர் செய்தாலும் தோல்வியே கண்டன. பாமினிப் படைகளின் வெற்றிக்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அந்த நிலைமையை மாற்றுவதற்கேற்ற வழிவகைகளை ஆராய்வதற்கும் தேவராயன் தன்னுடைய பிரபுக்களோடு கலந்து பேசினான். அந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக முஸ்லிம்களையும் விஜயநகரப் படைகளிற் சேர்த்துக்கொள்வதென்றும், அவர்களுடைய மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு முழு உரிமை தருவதென்றும் அவன் முடிவு செய்தான்.

மேலும், தன்னை அவர்கள் தலை தாழ்த்தி வணங்கும்போது அவர்களுடைய மதக் கோட்பாடுகளுக்கு எதிராக நடக்கும் பாவத்தை அவர்கள் செய்யா மலிருப்பதற்காகத் தன்னுடைய அரியணைக்கு முன்னால் திருக்குரான் பிரதி ஒன்றை வைப்பதற்கு ஏற்பாடு செய்தான். அன்றியும், இந்துப் போர் வீரர்களுக்கு நல்ல பயிற்சி -முக்கியமாக வில்வித்தையில் - அளிப்பதற்கும் தேவராயன் ஏற்பாடு செய்தான்.

இவ்வாறு சீர்திருத்தத்திற்குட்பட்ட விஜயநகரப் படை முன்பிருந்ததை விட அதிகத் திறமை பெற்ற படையாக விளங்கியது.

1443 இல் அப்துர் ரஜாக் கோழிக் கோட்டில் இருந்தபோது இரண்டாம் தேவராயனுடைய சகோதரர்களுள் ஒருவன் அவனைக் கொல்லும் நோக்கத்துடன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான் என்று கூறுகிறார். ஆனால், அந்தச் சதி வெற்றி பெறவில்லை. உடல்நலமில்லை என்று காரணங்கூறி, தேவராயன் அந்த விருந்துக்குப் போகாமல் நின்றுவிட்டான்.

ஆனால், விருந்துக்குச் சென்றிருந்த பல பிரபுக்கள் உயிரிழந்தார்கள். அந்தச் சதியைப் பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் பாமினி சுல்தான் இரண்டாம் அலாவுதீன் நன்றாக அறிந்திருந்தான் என்பதுதோன்றுகிறது.

ஏனெனில், அதன்பின் விஜய நகரில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவன் ஏழு இலட்சம் வராகனைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று தேவராயனுக்குச் சொல்லியனுப்பினான்.

தேவராயன் அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு மறுத்தது மன்றி ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின் மீது படையெடுத்தான். தொடக்கத்தில் அவனுக்கு நல்ல வெற்றி கிடைத்தது.

முதலில் தேவராயன் முடுகலைக் கைப்பற்றினான். அதன்பின் அவன் ராயச்சூரையும் பங்காப்பூரையும் முற்று கையிட்டுப் பிஜப்பூர் வரையிலிருந்த நாடு முழுவதையும் அழித்தான். ஆனால், பாமினிப் படைகள் விரைவில் புத்துரம் பெற்று, விஜயநகரப் படைகளோடு போர் செய்து, தேவராயனை முடுகல் வரையில் பின்வாங்குமாறு செய்தன.

அதன்பின் மூன்று சண்டைகள் நடந்தன. கடைசிச் சண்டையில் தேவராயனுடைய பெரிய மகன் இறந்தான். அவனுடைய படைகள் முடுகல் கோட்டைக்குள் ஓடி ஒளிந்து கொண்டன. ஆனால், பாமினித் தளபதிகளில் முக்கியமான இருவர் தேவ ராயன் கையில் அகப்பட்டுக் கொண்டான். அந்தத் தளபதிகளை விடுதலை செய்து தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் இந்துக்கள் எல்லோரையும் மொத்தமாகக் கொலை செய் யப் போவதாகப் பாமினி சல்தான் அச்சுறுத்தினான். வேறுவழியின்றி, தேவராயன் அந்தத் தளபதிகளை விடுதலை செய்துவிட்டான்.

**பேராசிரியர்**
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**


தேவராயன் பல கட்டடங்களைக் கட்டினான். புலவர்களை ஆதரித்தான். அவனே 'கல்வி கேள்விகளில் வல்ல நூலாசிரியன். கற்றறிந்தவர்கள் செய்த வாதங்களுக்குப் பலமுறை வெற்றியுறுமாறு அவன் தலைமை தாங்கினான் என்று நாம் அறிகிறோம்.

புகழ்பெற்ற டிண்டிம குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்தான வித்துவானும் (அரசவைப் புலவர்) ஸ்ரீநாதர் என்னும் தெலுங்குக் கவிஞரும் ஒருமுறை வாதிட்டனர். ஸ்ரீநாதரே சிறந்தவர் என்று தீர்ப்புக் கூறிய தேவராயன் அவருக்கு கனனாபிஷேகம் செய்து வந்தான். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

**147**



இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் பியூ குளோபல் மனப்போக்கறியும் திட்டத்தினர் (PEW GLOBAL ATTITUDES PROJECT) 25 நாடுகளை உள்ளடக்கிய 27ஆயிரம் மக்களிடம் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்தி வெளியிட்டனர்.

அதன்படி உலகம் பூராகவும் உள்ள மக்கள் அமெரிக்காவிற்குச் சார்பாக வாக்களித்துள்ளனர். அமெரிக்கா இப்போது மிகவும் ஏற்புடைய நாடு என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர். ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் காலத்தில் இந்தக் கருத் துக்கணிப்பு நடத்தப்பட்ட போது அமெரிக்கா மிகவும் தாழ்வாக எடைபோடப்பட்டதை ஞாபகப்படுத்துகிறார்கள் இத் திட்டத்தினர்.

இன்றும் அமெரிக்கா ஈராக்கிலும் ஆப்கானிஸ் தானிலும் யுத்தத்திலீடுபட்டுக் கொண்டு தானிருக்கிறது. U.S. காங்கிரஸ் இன்னும் சூழல் மாசடைவதை தடுக்கும் கரியமில வாயு வெளி யேறுவதை (CARBONS EMISSIONS) தடுக்க சட்டம் கொண்டுவர படாதபாடு பட்டுக்கொண்டு தானிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் அணுவாயுத உற்பத்தி நடந்து ஆயுதங்கள் களஞ்சியங்களை நிரப்புகின்றன தான். ஆகவேதான் லா –உவெலசா (முன் ன்னாள் போலக் முதல்வரும் 1983 இல் நோபல் சமாதான விருது பெற்றவர்) பின்வருமாறு தனது கருத்தை வெளியிட்டார்.

"இப் பரிசு ஒபாமாவை இன்னும் ஆர்வத்துடன் அதிகம் பாடுபட்டுழைக்கத் தூண்டும்" என்றார்.

ஐ.நா செயலாளர் பான்கீ மூன் பின்வருமாறு தனது கருத்தை வெளியிட்டார்.

"பன்முகப் பார்வை கொண்ட ஒரு புது யுகத்துள் நாம் பிரவேசிக்கிறோம். மனித இனம் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க உலகளாவிய பொது இலட்சியத்தையும் அசாதாரணமான முயற்சியையும் வேண்டிநிற்கின்றது. இந்தச் சவால்கள் அதிபர் ஒபாமா சம்பாஷணை மூலம் ஈடுபாட்டுடனும் உலகப் பிரச்சி னைகளைத் தீர்க்க கங்கணம் கட்டி நிற்கும் ஆவலின் வடிவமாக நிற்கிறார்".

பிரான்ஸ் நாட்டு அதிபர் பின்வருமாறு கூறுகிறார்.

"இறுதியாக அமெரிக்கா உலக நாட்டு மக்களின் இதயத்தை நாடியுள்ளது என்பதை உறுதிசெய்கிறது" என்றார்.

இந்த விருது பற்றி ஜேர்மன் அதிபர் ஏன்ஜலா மேர்க்கல் கூறுகையில், "மிகக் குறுகிய காலத்தில் உரையாடலில் ஈடுபட வேண்டிய விருப்பத்தை ஏற்படுத்திப் புதிய குரலை எழுப்பியுள்ளார் ஒபாமா" என்றார்.

யப்பானிய பிரதமரின் கூற்று பின்வருமாறு அமைகிறது.

"உண்மையில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை வழங்குகிறேன். ஒபாமா அதிபர் பதவியேற்ற கணத்திலிருந்து உலகம் மாறி வருவதை நான் காண்கிறேன். அவர் பிரேக்கில் (Brague) அணுவாயுத தடுப்புப்பற்றி ஆற்றிய உரை மிகவும் அற்புதமானது" என்கிறார்.

ஈரானின் வெளிவிவகார அமைச்சர் கூறுகையில், "அமெரிக்காவின் முந்திய போர் மூர்க்கம் கொண்ட கொள்கைகளை மாற்றியமைக்க இவ் விருது உதவுமாயின் அது வரவேற்கத் தக்கதே" என்கிறார்.

தலிபான் தலைவர் கூறும்போது, "சமா தானத்துக்கான அவரின் உபாயங்களில் எந்த மாற்றத்தையும் காண முடி யவில்லை. ஆகவே நாங்கள் இவ்விருது வழங்கியதைக் கண்டிக்கிறோம்" என்றார்.

ஒபாமா தனது வெற்றி குறித்து " நான் ஆச்சரியமடைந்து விட்டேன். இவ்விருது என்னை மேலும் பணிவுள்ளவனாக்கி விட்டது.

21 ஆம் நூற்றாண்டின் பிரச்சினைகளை ஏனைய நாடுகளுடன் சேர்ந்து உழைத்து தீர்வு காணுமாறு வலியுறுத்துவதாகக் கருதியே இப்பரிசை ஏற்படுத்திக் கொள்கிறேன்" என்கிறார்.

### ஜம்பொன்

அதிபர் ஒபாமா தனக்கு நோபல் பரிசாகக் கிடைக்கும் முழுத் தொகையான 1.4 மில்லியன் டொலர்களையும் தர்மத்திற்கு அன்பளிக்கப் போவதாக அறிவித்துள்ளார். ஒபாமா விரைவில் ஒஸ்லோ சென்று பரிசினைப் பெறுவார்.

"இப் பரிசு மழையால் நனைந்த உலக மாற்றங்களை உருவாக்கிய பெரு மக்கள் வரிசையில் இருக்கும் தகுதி எனக்கு இல்லை என்பதை நான் உணர்கிறேன். ஆயி னும் எல்லா நாடுகளையும் 21 ஆம் நூற்றாண்டில் சவால்களை எதிர்கொள்ள அழைக்கும் அழைப்பாக இதை ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். (தொடரும்)

# நீரிழிவு நோயை வரமுன் தடுப்போம்

**நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு இருந்தால், அறிகுறிகள் ஏதும் தெரியுமா?**

அடிக்கடி·தாகம் ஏற்படுதல், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருத்தல், காயம் ஆறாமல் இருத்தல், பார்வை மங்குதல், காரணமின்றி சோர்வு ஆகியவை நீரிழிவு நோய்க்கான பொதுவான அறிகுறிகள். நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புள்ளவர்க




ளுக்கு இத்தகைய அறிகுறிகள் எதுவும் வெளிப்படுவதில்லை.

இதனால் சோதனை செய்து கொள்ளா




மலே, நீரிழிவு நோய் இருப்பது தெரியாமலேயே இலட்சக்கணக்கானோர் உள்ளனர். மேலே சொன்ன அறிகுறிகள், உடலுக்குள்ளேயே கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிப்பதால் நீரிழிவு நோய்க்கான சோதனை செய்து கொள்ளாத வரை அதன் விளைவுகளை பலர் உணருவதில்லை.

**நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு இருந்தால் சிகிச்சை என்ன?**

இரண்டாவது வகை நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளதால் நீரிழிவு வருவதற்கு வாய்ப்பு உள்ள நிலையிலேயே எச்சரிக்கையாக இருப்பதற்கு அறிவுறுத்தப்படுகிறது.

எச்சரிக்கையாக இருங்கள் என்று சொல்வதாலேயே உங்களுக்கு நீரிழிவு நோய் வந்தே தீரும் என்று பொருள் கொள்ளாதீர்கள். கொழுப்புச் சத்து குறை வான உணவுகளை சாப்பிடுவது, நெய் - இனிப்பு உள்ளிட்ட கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பதன் மூலம் எடையைக் குறைத்துக் கொள்ள முடியும்.

குறிப்பாக கீரைகள் உட்பட நார்ச்சத்து மிகுந்த காய்கறிகளை அதிகம் சாப்பிடுங்கள். இதனால் கணையத்தில் இன்சுலின் சுரப்பு சீராகி இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு இயல்பானதாகி நீங்கள் வேலை செய்ய போதுமான ஆற்றல் கிடைக்கும்.

**எளிய உடற்பயிற்சி எது?**


நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு உள்ளது தெரிய வந்தவுடனாவது தினமும் வாக்கிங் செல்லத் தொடங்குங்கள். இரவு சாப்பிட்டுவிட்டு குடும்பத்தினருடன் ரி.வீ. பார்க்காமல் அனைவரும் வாக்கிங் செல்லுங்கள்.

உங்களால் உங்கள் குடும்பத்தினருக்கும் நீரிழிவு நோயுக்கு முந்தைய நிலை ஏற்படாமல் தடுக்கலாம். நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ள நிலையிலேயே இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சில டாக்டர்கள் மருந்துகளைப் பரிந்துரைப்பார்கள். இவ்வாறு மருந்துகளை பரிந்துரைத்தால் அவற்றைச் சாப்பிடத் தவறாதீர்கள்.

**நீரிழிவு நோய் வாய்ப்புள்ளதை சோதனை மூலம் கட்டாயம் தெரிந்து கொண்டு தான் ஆகவேண்டுமா? நீரிழிவு நோய் இருப்பது தெரிய வந்த பிறகு சிகிச்சை எடுத்துக் கொண்டால் போதாதா?**

இங்குதான் மருத்துவ அறிவியல் முன்னேற்றத்தில் அற்புதமே உள்ளது. நாம் சாப்பிடும் உணவு காரணமாக உருவாக்கும் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸை ஒழுங்காக ஆற்றலாக மாற கணையத்தில் இன்சுலின் சுரப்பு சீராக இருக்க வேண்டும். இன்சுலின் சுரப்பு சீராக இருக்க வேண்டுமானால் பீட்டா செல்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும். பரிசோதனை செய்து கொள்ளாமல் உடலுக்குள் ஓசை யின்றி நீரிழிவு நோய்க்கான பாதிப்பு தொடங்கிவிடும் நிலையில் பீட்டாசெல்களிலும் பாதிப்பு ஆரம்பித்து விடும்.

ஆரம்ப நிலையில் சோதனை செய்து கொள்ளாமல் திடீரென நீரிழிவு நோய் இருப்பது தெரிய வரும் நிலையில் இன்சுலி னின் பிரம்மாவாக விளங்கும் பீட்டா செல்களில் பாதிப்பு ஏற்கனவே தொடங்கி இருக்கும். பின் னர் என்னதான் தலைகீழாக குத்துக்கரணம் அடித்தாலும் பீட்டா செல்களின் பாதிப்பை சரி செய்ய முடியாது. இன்சுலின் சுரப் பில் ஏற்பட்ட குறைபாட்டையும் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரமுடியாது.




மாறாக சோதனை செய்து கொண்டு நீரிழிவு நோய் வர வாய்ப்புள்ளதை தெரிந்து கொண்டு உணவு முறை மாற்றம் - உடற் பயிற்சியை நீங்கள் ஆரம்பித்து விட்டால் பீட்டா செல்க ளுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுத்து விட முடி யும். எனவே இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு இயல்பானதைவிட அதிகரிக்கத் தொடங்கி விடும் நிலையிலேயே ஓசையின்றி கணையத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பாதிப்பு ஆரம்பித்து விடுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ளதை முன்னரே வெளிப்படுத்தும் ஓ.ஜி.டி.டி. பரிசோதனை முடிபுகள் மூலம் தெரிய வரும் பொதுவான விடயங்கள் என்ன?**

ஓ.ஜி.டி.டி. பரிசோதனையில் வெறும் வயிற்றில் செய்யப்பட்ட பரிசோதனையில் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாக இருத்தல் (IFG-Impaired Fasting Glucose) குளுக் கோஸ் கொடுத்து 2 மணி நேரம் கழித்து செய்யப்பட்ட பரிசோதனையில் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாக இருத்தல் (IGT-Impaired Glucose Tolerance) ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வெறும் வயிற்றில் செய்யப்பட்ட பரிசோதனையில் இரத்தத்தில் குளுக்கோஸின்அளவு அதிகமாக இருக்கும். பிரச்சினை (ஐ.எஃப்.ஜி) ஆண்களில் அதிகம். குளுக்கோஸ் கொடுத்து இரண்டு மணி நேரம் கழித்து செய்யப்படும் பரிசோதனையில் அதிக சர்க்கரை அளவு பிரச்சினை (ஐ.ஜி.டி) பெண்களில் அதிகம். ஆனால் இரண்டு விதமான பிரச்சினைகள் காரணமாகவும் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

நீரிழிவு நோய் வந்தவர்களில் 60 சதவீதம் பேருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை ஏற்பட்டது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. எனவே நீரிழிவு நோய் வருவதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு தடுப்பு நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**நீரிழிவு நோய் வராமல் தடுத்துக் கொள்ள சூப்பர் ஐடியா சொல்லுங்களேன்?**


முதலில் நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ளதா என்பதை ஓ.ஜி. டி.டி பரிசோதனை (குளுக்கோஸ் பரிசோ தனை) மூலம் தெரிந்து கொள்வது அவசியம். ஓ.ஜி.டி.டி. பரிசோதனையில் நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ளதாக தெரிய வரும் நிலையில் ஏற்கனவே சொன்னபடி உயரத்திற்கு ஏற்ற உடல் எடையைத் தொடர்ந்து பராமரித்தல், கொழுப்புச் சத்து இல்லாத உணவு வகைகளை கொண்ட உணவு முறை மாற்றம், வாக்கிங் உட்பட தினமும் உடற் பயிற்சி ஆகியவற்றை பழக்கமாகக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ளது முன்கூட்டியே தெரிய வந்துவிட்டதை வரமாகக் கருத வேண்டும். ஏனெனில் உடல் முழுவதும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நீரிழிவு நோயை முளையிலேயே கிள்ளி எறிய எழுப்பப்படும் எச்சரிக்கை மணி தான் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலை. டாக்டரின் பரிந்துரைப்படி எச்சரிக்கையாக

டாக்டர் வீ. பாலாஜி
டாக்டர். வீ. சேஷையா
நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர்கள்
சென்னை

இருந்து தொடர்ந்து இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் நிலையில் நீங்கள் எல்லோரையும் பார்த்து வாழ்க வளமுடன் என தன்னம்பிக்கையுடன் கூற முடியும். (முற்றும்)

# மூலநோய் / எருவாய் முளைநோய்




➤ கீழ்குடலிலிருந்த எருவாய் (மலவாசல்) வரையிலுமுள்ள குடலின் குருதிக்கலங்கள் ஒன்று / பல தாபிதப்பட்டு, வீங்கி எருவாயில் எரிச்சல், அரிப்பு உண்டாக்கி, வாய்வு (அபான வாயு) கட்டுப்பட்டு மலம் வெளிப்போகாத படி தடுத்தலும், முக்கி வெளியாக்க முயலின் குருதி நாளங்களைக் கீறி கசியுங் குருதியோடு மலம் (எரு) வெளியேறுதலும், முக்குதலுக்கேற்ப முளைவெளியாக்குதலும் எருவாய் முளை நோய் /மூலநோய் ஆகும்.

➤மூலவருத்தம், மூலமுளை, Piles , என பலவாறு அழைப்பர்.

**நோய் வரும் வழிகள் சில**

➤ மலச்சிக்கல் (எரு கட்டுப்பட்ட நிலை)

➤ உடற்றீயைப் பெருக்கக் கூடிய உணவு வகை உண்ணல்.

(உ+ம் உறைப்பு, காரம், எண்ணெய்.

➤ எப்பொழுதும் உட்கார்ந்திருத்தல்.

உ+ம் - சாரதிகள்

➤ பெண்கள் கருத்தரித்துள்ள நிலையில் (கர்ப்பிணிக்காலம்)

➤ பெருவயிற்று நோய்கள்.

உ+ம் வயிற்றுக்கட்டிகள், கல்லீரல் அழற்சி, தொடர்ச்சியான இருமல்.

➤ தாய், தந்தை வழி (பரம்பரை)

**இந்நோய்க்கான முக்கிய அறிகுறிகள்**

➤மலவாசலில் நமைச்சல், எரிச்சல், தினவு.

➤அடிக்கடி காற்று மலவாசலால் வெளியேறுதல்.

➤மலம் சூடோடு எரிச்சலுங்கூடிக் கழிதல்.

➤மலம் வருதல் போன்ற உணர்ச்சி உண்டாயினும் அது வெளிப்படாமல் நீர் போலும் பிசுபிசுப்புடன் கழிதல்.

➤ எருவாய் முளை வெளியாதல், சில வேளை குருதி பீறிட்டுப் பாயும்.

➤ வெளிவந்த எருவாய் முளை எழுந்திருக்கும் போது உள்ளடங்கும் ஆயினும் எருவாயில் எரிச்சல் நோவை உண்டாக்கும்.

➤மூங்கில் குருத்துப் போல் தடித்து அடிக்குடல் வெளியாகும். அதனை உள்ளே தள்ளின் போகும். மீண்டும் கீழிறங்கும். அதிலிருந்து சீழும் குருதியும் வடியும்.

➤வெளிவந்த முளை வெளிவருவதும் உள்ளடங்குவதுமாக பருமனில் பருத்து வந்தபின், கீழிறங்கிய முளை மீண்டும் உள்ளுக்குப் போகாமல் நிலைத்து விடுவதுமுண்டு.

➤ இத்துன்பங்களால் மனமும் தளர்ந்து அடிக்கடி சினங்கொண்டு சீறி வீழ்வார்கள்.

**தடுப்பதற்கான வழிகள்**

➤ முக்கி மலம் கழிக்கக்கூடாது.

➤ மலம் கழிக்கும் தூண்டலை அடக்காது உணர்வு வந்தவுடன் மலம் கழித்தல்.

➤ உடல் எடையைக் குறைத்தல்.

➤ தேனீர், கோப்பி அருந்துவதை தவிர்த்தல்.

➤ உடலைச் சுறுசுறுப்பாக வைத்திருத்தல். உ+ம் நடத்தல், சைக்கிள் ஓடல், யோகாசனம் செய்தல்.

➤ நீர் நிறைய அருந்துதல்

1.5-2 லீற்றருக்கு குறையாது.

➤ பழச்சாறு, காய்கறிச்சாறு அருந்துதல்

➤ நார்ச்சத்துள்ள உணவுகள் உண்ணல் வாழைத்தண்டு, கீரைகள் - துத்திக்கீரை, பசளிக்கீரை, வெந்தயக்கீரை, காய்கறிகள் - கோலிபிளவர், புடலங்காய், வெண்டிக்காய், பாகற்காய், பழங்கள் - பேரீச்சம்பழம், அத்திப் பழம், மாம்பழம், தோடம்பழம், திராட்சை.

➤ கொகிலை இலை, தண்டு உணவில் சேர்த்தல்.

➤ பொன்னாங்காணிக்கீரை, பூண்டு, நெய் சேர்த்து உண்டு வரல்.

➤நோய் நிலைமையில் தினமும் முள்ளங்கி கருணைக்கிழங்கு சாப்பிடுதல்.

➤பிரண்டைக்கொழுந்தை நன்றாக அரைத்து நல்லெண்ணெயில் கலந்து தொடர்ந்து 5 நாட்கள் சாப்பிட இரத்தம் கசிவது நிற்கும்.



➤ வாழைப்பூச்சாற்றில் சீரகத்தை அரைத்து 10கிராம் சாப்பிட்டு வர மூலத்திலிருந்து இரத்தம் வடிவது நிற்கும்.

➤ மிளகுத்தூள், பெருஞ்சீரகத்தூள் ,தேன் கலந்து லேகியமாக்கி 5 கிராம் தினம் இரு வேளை சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

➤வட்டத்துத்தியிலையில் ஆமணக்கெண்ணெய் தடவி இலையை ஆமணக்கெண்ணெய் விளக்கில் வாட்டி, ஆசனவாயிலில் வைத்துவர கடுப்பு நீங்கும். மூலம் உட்செல்லும்.

➤ வேப்பங்காயை நன்றாக அரைத்து ஒரு ரூபாய் அளவு வில்லை தட்டி தோசைக்கல்லில் சற்று நேரம் போட்டு சுடவைத்து ஆசனவாயிலில் வைத்துக் கட்டிவரல். இவ்வாறு 3 நாட்கள் செய்து வர மூலமுளை நீங்கும்.

வெளியீடு
ஆயுர்வேத திணைக்களம்
நாவின்ன, மகரகம.

➤ பால்சாம்பிராணியும் ஏலமும் சமமாய் பொடித்து நெருப்பில் தூவி அபானத்தில் (மூல வாயிலில்) புகை பிடிக்க மூலமுளை நீங்கும்.

➤ ஓர் அகலமான பாத்திரத்தில் வெந்நீரை ஊற்றி வட்டத்துத்தியிலை போட்டு அதில் சிறிது நேரம் அமர்ந்திருத்தல். ஒரு நாளைக்கு 2,3 தடவை செய்யலாம். வேதனை குறையும், உதிரம் கொட்டுவது நிற்கும், மூலம் குணமாகும்.

# பாக். போராளிகளால் பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த 40 பேர் மீட்பு

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் போராளிகளால் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 40 பேரை அந்நாட்டு பாதுகாப்புப்படையினர் விடுவித்துள்ளனர்.



இந்த மீட்பு நடவடிக்கையின் போது 3 பணயக்கைதிகளும் இரு படையினரும் நான்கு போராளிகளும் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி போராளிகளில் ஒருவர் தற்கொலை இடுப்புப்பட்டியை அணிந்திருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த ஒரு போராளி கைது செய்யப்பட்டுள்ளார். போராளிகள் ராவல் பிண்டியிலுள்ள மேற்படி இராணுவத் தலைமையகத்தை கடந்த சனிக்கிழமை தாக்கினர். இந்த ஆரம்பக் கட்ட தாக்குதலின் போது 6 படையினரும் 4 போராளிகளும் பலியாகினர்.

இந்நிலையில் தற்போது படை நட வடிக்கை வெற்றிகரமாக நிறைவேறி நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேர்ஜெனரல் அதார் அப்பாஸ் தெரிவித்தார்.

மீட்பு நடவடிக்கையின் நிமித்தம் இராணுவத் தளத்தில் பாகிஸ்தானிய விசேட படையினர் நுழைந்தபோது உக்கிர துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகவும் அப்பிரதேசம் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தால் அதிர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## கனடாவில் விமான விபத்தில் 4 பேர் பலி

கனடாவின் ஒன்டாரியோ அருகே சுற் றுலா பயணிகளை ஏற்றி சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியானார்கள் .விபத்துக்குள்ளான இடத்தில் விமானத்தின் சேதமடைந்த பகுதிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.மோசமான வானிலை மற்றும் விமானத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறுகளே விபத்திற்கு காரணமென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# உலகப் பிரளயப் பரிசோதனை நிலைய விஞ்ஞானி கைது

சுவிட்ஸர்லாந்தில் உலகப் பிரளயம் எவ்வாறு ஏற்பட்டு உயிர்கள் தோன்றின என்பதை கண்டறிவதற்கான நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹட்ரோன் பிரளய நிலையத்தை ஸ்தாபிப்பதில் பங்கேற்ற விஞ்ஞானி ஒருவர் அல்ஜீரியாவை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் பிரான்ஸ் பொலிஸார் இந்த விஞ்ஞானியை கைது செய்துள்ளதாக ஐரோப்பிய அணு சக்தி பௌதீக அமைப்பு தெரிவிக்கிறது.

எனினும் மேற்படி விஞ்ஞானியின் பெயர் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஓ-6)

## நைஜீரியாவில்

# எண்ணெய் தாங்கி வாகனம் தீப்பற்றியதில் 80 பேர் பலி

(லாகோஸ்)

நைஜீரியாவில் எண்ணெய் தாங்கிய வாகனமொன்று தீப்பற்றி வெடித்துச் சிதறியதில் 80 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

அனம்பிரா மாநிலத்தில் இடம்பெற்ற இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மினி பஸ்களில் பயணித்தவர்களே பெருமளவில் பலியாகியுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.




சம்பவத்தின் போது ஆட்களை ஏற்றிச் சென்ற 5 மினி பஸ்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

எண்ணெய்த் தாங்கி வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதையடுத்தே இந்த படுகிறது.

ஒனிட்ஷா மற்றும் எனுகு ஆகிய நகர்களுக்கு இடைப்பட்ட வீதியிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (ஓ-6)

# அகிம்சையின் தந்தை மகாத்மாகாந்திக்கு நோபல் பரிசு கிடைக்காது ஏன்?

## வெளிவராத தகவல்கள்

(புதுடில்லி)


5 தடவை நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டும் மகாத்மா காந்திக்கு பரிசு கிடைக்காமல் போனது ஏன்? என்பது குறித்து தகவல்கள் வெளியாகி உள்ளன. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு அண்மையில் அறிவிக்கப்பட்டது.

இது உலகம் முழுவதும் வரவேற்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் ஒரு நாட்டின் விடுதலைக்காக அகிம்சை முறையில் போராடி உலகையே தன் பக்கம் திரும்பச் செய்த மகாத்மா காந்திக்கு ஏன் நோபல் பரிசு வழங்கப்படவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

இத்தனைக்கும் 1937, 1938 ,1939, 1947 மற்றும் 1948 (காந்தி இறந்த பின்) ஆகிய 5 ஆண்டுகளில் நோபல் பரிசுக்காக மகாத்மா காந்தி சிபாரிசு செய்யப்பட்டார். இதில் கடுமையான போட்டிக்கு இடையில் 1937, 1947 மற்றும் 1948 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் மகாத்மாவின் பெயர் நோபல் பரிசுக்கான இறுதிச் சுற்று வரை சென்றது. எனினும் பரிசு கிடைக்கவில்லை இது பலருக்கும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

மகாத்மா காந்திக்கு ஏன் நோபல் பரிசு வழங்கப்படவில்லை என்பதற்கு நோபல் பரிசு தேர்வுக்குழு பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளது. முதன் முதலாக 1937ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் பெயர் நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டு இறுதிச் சுற்றுவரை சென்றது.

அப்போது நோபல் தேர்வுக்குழுவின் ஆலோசகரும் பேராசிரியருமான ஜாக்கப் வேர்ம் முல்லர் காந்தி பற்றி எழுதிய குறிப்புகள் தான் காந்திக்கு நோபல் பரிசு கிடைக்காமல் போனதற்கு காரணமாய் அமைந்தது. அவர் எழுதிய குறிப்பு இது தான்.



சந்தேகத்துக்கு இடமின்றி காந்தி நல்ல மேன்மையான தன்னலமில்லாத மனிதர் தான். பெரும்பான்மை மக்களால் கௌரவிக்கப்படக்கூடிய பெரிய மனிதராக திகழ்கின்றவர் தான். எனினும் அவரது கொள்கைகளில் காணப்பட்ட திடீர் மாற்றங்கள் குறித்து அவரது ஆதரவாளர்களே கூட சிரமப்பட்டுத் தான் திருப்தியான விளக்கம் அளிக்க முடி கிறது. காந்தி ஒரு சுதந்திர போராட்டக்காரர் சர் வாதிகாரி, மிகுந்த சிந்தனை கொண்டவர், தேச பக்தர்.அவர் அவ்வப்போது ஒரு இயேசு போல் தோன்றினாலும் உடனடியாக அவர் ஒரு சாதாரண மனிதராக மாறி விடுகிறார்.

தொடர்ச்சியாக அவர் அகிம்சை நெறியைப் பின்பற்றவில்லை வெள்ளையர் அரசாங்கத்துக்கு எதிராக அவர் செய்த பிரசாரங்கள் சில நேரம் பெரும் கலவரத்தையும் வன்முறையையும் ஏற்படுத்தியுள்ளன.

1920-21 ஆம் ஆண்டு காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தின்போது சாவ்ரி சாவ்ரா என்னுமிடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு காவல் நிலையத்தை தாக்கியதில் பொலிஸார் பலர் உயிரிழந்தனர். பிறகு அந்த பொலிஸ் நிலையம் தீ வைத்தும் கொளுத்தப்பட்டது.

மேலும் காந்தி இந்திய தேசியவாதியாகத் தான் திகழ்ந்தார். தென்னாபிரிக்காவில் கூட அவர் இந்தியர்களுக்காக மட்டுமே போராடினார். அந்த நாட்டின் கறுப்பர் இன மக்களின் நிலைக்காக அவர் போராடவில்லை. இப்படி வோர்ம் முல்லர் எழுதிய குறிப்புகளால்தான் மகாத்மா காந்திக்கு முதல் தடவை நோபல் பரிசு வாய்ப்பு நழுவிப் போனது.

இரண்டாவது தடவையாக 1947ஆம் ஆண்டு மகாத்மாவின் பெயர் மீண்டும் நோபல் பரிசு தேர்வுக்கான இறுதிச் சுற்று வரை சென்றது. இந்த தடவை தேர்வுக் குழு ஆலோசகராக இருந்தவர் ஜென்ஸ் அருப் செய்ப் . இவர் வோர்ம் முல்லர் போல் மகாத்மா காந்தியை விமர்சித்து குறிப்புகள் எழுதவில்லை. காந்தியின்செயல்களை பாராட் டியே எழுதியிருந்தார். எனினும் இரண்டாவது தடவையாகவும் காந்திக்கு நோபல் பரிசு வாய்ப்பு நழுவிப்போனது.

11 ஆண்டுகளில் 3 தடவையாக 1948 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின்பெயர் நோபல்பரிசுக்கான இறுதிச்சுற்றுவரை சென்றது. துரதிஷ்டவசமாக அந்த ஆண்டு ஜனவரி மாதம் மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டு விட்டார்.

அப்போது காந்தியின் கடைசி 5மாத செயற்பாடுகள் குறித்து நோபல் தேர்வுக்குழுவின் ஆலோசகர் செய்ப் நல்ல விதமாகவே எழுதினார்.

காந்தி தனது வாழ் நாள் முழுவதும் நீதி மற்றும் அரசியல் நெறி முறைகளை மட்டுமே கொள்கைளாக கொண்டு செயல்பட்டார். இதனால் இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் அவர்வெகுவாக போற்றப்பட்டார். இந்த வகையில்அவர்ஒரு மதத்தை தோற்றி வித்தவர்போல் ஒப்பிடப்படுகிறார். என்று செய்ப் தனது குறிப்பில் கூறியிருந்தார்.

இதனால் மகாத்மா காந்திக்கு நோபல் பரிசு கிடைத்துவிடும் என்றே கருதப்பட்டது. ஆனால் இறந்தவர்களுக்கு நோபல்பரிசு வழங்குவதில் அப்போது நோபல்பரிசு தேர்வுக்குழு ஒரு விசித்திர விதியை பின்பற்றி வந்தது.

அதன்படி பரிசுக்கு சிபாரிசு செய்பட்டவர் தகுதி உடையவராக இருந்தால்அவர் ஏதாவதொரு அமைப்பைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். ஆனால் காந்தி எந்த அமைப்பிலும் இல்லை. இதனால் அவருக்கு பரிசு வழங்குவதில் தயக்கம் காட்டப்பட்டது.

ஏனென்றால் மகாத்மா காந்தி இறப்புக்கு பின் எந்த சொத்துக்களையும் விட்டுச் செல்லவில்லை. உயிலும் எழுதவில்லை. இதனால் நோபல்பரிசுத்தொகையை யார்பெறுவது என்பதில் கேள்வி எழுந்தது. பரிசை வழங்கும் சுவீடன் அமைப்பின் நிறுவனங்கள் இது குறித்து ஆலோசனை நடத்தின.

அவர்களது பதில் காந்திக்கு நோபல் பரிசு வழங்கிட சாதகமாக அமையவில்லை. ஏனெனில் நோபல் பரிசு பெறும் தகுதிக்குரியவர் இறக்கும முன்பாகவே தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அந்த அமைப்புக்கள் கருதியதுதான்.

எனவே தேர்வுக்குழு இறுதி முடிபு எடுக்கும் முன்பாகவே மகாத்மா காந்தி இறந்து விட்டதால் அவருக்கு நோபல் பரிசு கிடைக்காமல் போய்விட்டது.

இறந்து விட்ட மகாத்மா காந்திக்கு நோபல் பரிசு வழங்கப்படாததால் 1948 ஆம் ஆண்டு வேறு யாருக்கும் நோபல் பரிசை வழங்க தேர்வுக்குழு விரும்பவில்லை. இதனால் உயிருடன் இருக்கும் எவரும் அந்த ஆண்டு நோபல் பரிசைப்பெறும் தகுதியுடன் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக 1948ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கும் வழங்கப்பட்வில்லை.

இது மட்டுமே நோபல் பரிசு தேர்வில் மகாத்மா காந்திக்கு கிடைத்த ஒரே கௌரவம் எனினும்இன்று மகாத்மாவின் அகிம்சை தான் உலகம் முழுவதும் பயங்கரவாதத்துக்கு எதிரான சிறந்த மருந்தாக திகழ்கிறது.


இதன் அடிப்படையில் தான் தென்ஆபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய நெல்சன்மண்டேலா முதல் பயங்கரவாதம் மற்றும் அணு ஆயுத பரவலுக்கு எதிராக பாடுபடும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வரை நோபல் பரிசு கிடைத்துவிட்டது என்பது மறுக்கமுடியாத மாபெரும் உண்மை. (ஓ-6)

# கைத்தொலைபேசி பாவனை பாதுகாப்பானதா?



ஹலோ!

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் கைத்தொலைபேசி அல்லது செல்லிடத் தொலைபேசி என அழைக்கப்படுகின்ற MOBILE PHONE இன் பாவனை மிகவும் இன்றியமையாததாக உள்ளது.மக்கள் ஒருவரோடு ஒருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வேறு பல தேவைகளுக்கும் உதவுகின்ற கைத்தொலைபேசியானது பல நன்மையான அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும், அதனால் பாதகமான விளைவுகளும் ஏற்படத்தான் செய்கின்றது.இதுபற்றி மக்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.



SOURCE: Ofcom

கைத்தொலைபேசி செயற்படும் முறை பற்றி முதலில் நாம் அறிந்துகொள்வோம். ஒரு கைத்தொலைபேசியானது இன்னொரு கைத்தொலைபேசியுடன் மின்காந்த றேடியோ அதிர்வலைகள் மூலமாக (ELECROMA GNETIC REDIO FREQUENCY) இணைக் கப்படுகிறது.இதற்கு தொலைத் தொடர்பு கோபுரம்,தொலைபேசிப் பரிவர்த்தனை நிலைய சாதனங்கள், செய்மதி ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன. இயங்கு நிலையில் (SWITCH ON) உள்ள ஓர் கைத் தொலைபேசியானது தொடர்ச்சியாக பிரதான தொலைத் தொடர்பு வலையமைப்புடன் றேடியோ அதிர் வலையைத் (RADIO FREQUENCY) தொடர்ந்து பேணியவாறே இருக்கும்.இது (SIGNAL/COVEREGE) என அழைக்கப்படும்.



கைத்தொலைபேசியின் வரலாற்றை நோக்குமிடத்து இதனை உலகிற்கு முதன் முதல் 1973 இல் அறிமுகப்படுத்தியவர் அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த டாக்டர் மாட்டீன் கூப்பர் ஆவார். இவரால் அறிமுகப்படுத் தப்பட்ட அளவில் பெரியதான கைத் தொலைபேசியானது காலத்திற்குக்காலம் பரிணாம வளர்ச்சியடைந்து இன்று அளவில் மிகவும் சிறியதாகவும் பல்வேறு தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாகவும் பாவனையாளர்களின் மிக நெருங்கிய நண்பனாகவும் விளங்குகின்றது.

செல்லிடத் தொலைபேசிப் பாவனையானது உலகளாவிய ரீதியில் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு வருவதை புள்ளி விபரங்கள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. 2007 ஆம் ஆண்டு டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தகவல்களின் படி உலக சனத்தொகையில் 330 மில்லியன் மக்கள் கைத்தொலைபேசியைப் பாவிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய உலக சனத்தொகையில் அண்ணளவாக 677 மில்லியன[illegible]கும்.

இதற்கமைய செல்லிடத் தொலை பேசியின் பாவனையாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கையில் அண்மையில் பெறப்பட்ட தகவலின்படி ஏறத்தாழ 5. 4மில்லியன் பாவனையாளர்கள் உள்ளதாக அறியமுடிகின்றது. இலங்கையிலும் கைத்தொலைபேசிப் பாவனையானது கடந்த வருடங்களில் வேகமாக அதிகரித்துவருவதை காணக்கூடியதாக உள்ளது.

கைத்தொலைபேசியின் நன்மைகளைப் பெறுகின்ற நாம் அதன் தொடர்ச்சியான பாவனையினால் ஏற்படக்கூடிய விரும்பத் தகாத அல்லது பாதகமான விளைவுகளை அறிந்து கொள்வதன் மூலம் எம்மை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

கைத்தொலைபேசியில் இருந்தும் பரிவர்த் தனைக் கோபுரங்களின் அன்ரனாக்களில் (ANTENNA) இருந்தும் வெளி விடப்படுகின்ற மின் காந்த அதிர்வலைகள் (RF) மூலமாகப் பாவனையாளர்கள் தற்காலிகமாகவோ நீண்டகாலத்திற்கோ பலவித அசௌகரியங்களுக்கு ஆளாவது ஆய்வுகளின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு ஆதர்வானதும் எதிரானதுமான கருத்துக்கள் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணம் உள்ளன.இவை தொடர்பான தகவல்களை (www.controlyourimpact.com, www.Lovelysms.com) இணையத்தளங்கள் மூலமாக எவரும் அறிந்து கொள்ள முடியும்.

இன்றைய வர்த்தக உலகில் செல்லிடத் தொலைபேசி உற்பத்தியிலும், விற்பனையிலும் பல முன்னணி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. கைத்தொலைபேசி வலையமைப்பு சேவையை வழங்கும் நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவுகின்ற காரணத்தினால் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. "குறைந்த செலவில்அதிக நேரம் உரையாடலாம்" என்ற நிலையில் பாவனையாளர்கள் தமது உடல், உள, நலம் தொடர்பில் முன்னெச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருப்பது அவசியமாகின்றது.

செல்லிடத் தொலைபேசிப் பாவனையினால் ஏற்படுவதாகக் கூறப்படுகின்ற பாதகமான விளைவுகள் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.


1.தொடர்ச்சியாக செல்லிடத் தொலைபேசியை பாவிக்கின்ற கால அளவு.

2.செல்லிடத் தொலைபேசிக்கும் பாவனையாளர்களுக்கும் இடையிலான இடைவெளி.

3.செல்லிடத் தொலைபேசிக்கு பரிவர்த் தனைக் கோபுரத்திற்கும் இடையிலான தகவல் பரிமாற்றலின் அளவு (COVEREGE/ SIGNAL)

4. பாவனையாளர் HANDS FREE DIVICE பாவிக்கின்றாரா இல்லையா என்பதனைப் பொறுத்தும் உள்ளது.

5.கைத்தொலைபேசியினை தொடர்ச்சியாக அதிகநேரம் பாவிப்பதனால் மட்டுமன்றி அதனைப் பாவிக்காத நிலையிலும் (இயங்கிக் கொண்டிருக்கும்) (SWITCH ON) உடலுடன் சேர்ந்ததாக சட்டைப் பையில் வைத்திருப்பதனாலும் RF இன் தாக்கத்திற்கு உள்ளாக நேரிடுகின்றது.



பெரும்பாலான பாவனையாளர்கள் செல்லிடத் தொலைபேசியினை காதுக்கு அண்மையாக தலையுடன் இணைந்ததாக வைத்துப் பாவிப்பதனால் மூளையும், நரம்புத் தொகுதியும் அதிக அளவு பாதிக்கப்படுகின்றது. ஆண்கள் செல்லிடத் தொலைபேசியினை காற்சட்டைப் பையினுள் (JEENS POCKET) தொடர்ச்சியாக வைத்திருப்பதனால் பிள்ளைப்பேறில்லாமல் (INFERTILITY) ஓர் காரணமாக அமைவதாக ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இதற்கு ஆதரவானதும் மறுப்பானதுமான கருத்துகளும் நிலவுகின்றன.

(www.controlyourimpact.com)

செல்லிடத் தொலைபேசியிலிருந்து வெளியிடப்படுகின்ற RF இன் சக்தியின் பெருமளவு (60%) பாவனையாளர்களின் உடற் கலங்களினால் அகத்துறிஞ்சப்படுகின்றது. இதன் காரணமாக உடனடியானதும் நாள்பட்டதுமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. எவ்வாறான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதனை நாம் சற்று விபரமாக நோக்குவோம்.

பாவனையாளர்களில் பொதுவாக அவதானிக்கப்பட்ட அல்லது முறைப்பாடு செய்யப்பட்ட குறி குணங்களாவன.

தலைவலி (HEADACTHE)
உடற்சோர்வு (MALAISE)
களைப்பு (FATIGUE)
நித்திரைக்குழப்பம் (SLEEPING DIS TURBANCES)
தலை சுற்றுதல் (DIZZINESS)
பார்வை மங்குதல் (BLIRRING VISION)

மனதை ஒருநிலைக்கு உட்படுத்த முடியாமை (DIFFICULTY IN CONCENTRATION )

மூச்சுக் கஷ்டம் - (DIFFICULTY IN BREATHING) காதில் வலி, எரிவு போன்ற உணர்வு-(EARACHEAND HOT EARS) எரிவு போன்ற உணர்வு -(BURRNING SKIN)

மூட்டு வலி (JOINT PAIN)



இவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறி குணங்கள் காணப்படலாம்.

பாவனையாளர்களில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வின் மூலம் இனங்காணப்பட்ட உளவியல் பாதிப்புக்களாவன,

அதிகரித்த மன அழுத்தம் (INCREASED STRESS LEVEL)

பதட்டம் (TENSION)



திடீர் மனக்குழப்பம் (SUDDEN CONFUSION)


ஞாபகக்குறைவு (DISTRURB MEMORY)

அத்துடன் மிக முக்கியமான விடயம் யாதெனில் செல்லிடத் தொலைபேசிப் பாவனைக்கு அடிமையர்தல் (CELL PHONE ADDICTION) இவ்வாறான நபர் தொடர்ந்து எவருடனாவது எதையாவது பேசிக்கொண்டே இருப்பதுடன் தொலைபேசியின் ஏனைய பயன்களை அனுபவிப்பதிலும் முழுக் கவனத்



தையும் நேரத்தையும் செலவழித்துக் கொண்டிருப்பர்.இவரினால் செல்லிடத் தொலைபேசியைப் பிரிந்திருக்க முடியாமலிருக்கும். இது தனிநபர் பிரச்சினை மட்டுமன்றி மிக முக்கியமாக சமூகப் பிரச்சினையாக 21 ஆம் நூற்றாண்டில் உருவாகி வரக்கூடுமென உளவியலாளர்கள் நம்புகின்றனர்.

மிகமுக்கியமான பாதிப்பாகப் பேசப்படுவது மூளையில் ஏற்படுகின்ற கட்டிகளாகும். சுவீடன், டென்மார்க்,பிரிட்டன்,ஜேர்மன் ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிபுகள் இதனை உறுதிப்படுத் துவதாக உள்ளது.



இதனை நிரூபிப்பதற்காக பல ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிக முக்கியமான விடயம் என்னவெனில் மூளையில் கட்டிகள் தோன்றி வளர்ந்து அந் நோய்க்கான குறி குணங்கள் வெளிக்காட்டப்படுவதற்கும் இனங்காணப் படுவதற்கும் பல ஆண்டுகள் ஆகின்றன என்பதாகும்.

(www.tuberose.com)

செல்லிடத் தொலைபேசி பாவனை காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுகின்ற இணையத் தளங்களிலிருந்து பெறப்பட்ட தகல்வகளின் படி இந்தப்புற்றுநோய் (பெரும்பாலும் குழந்தைகளுக்கு) வாய்ப்புற்றுநோய், மூட்டுக்களில் வலி ஆகியன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு போலந்து நாட்டிலும் , 2005 ஆம் ஆண்டு கங்கேரி நாட்டிலும், 2008 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி கைத்தொலைபேசி பாவிக்கின்ற ஆண்களில் ஏற்படுகின்ற மலட்டுத்தன்மை தொடர்பான ஆய்வுகளின் விபரம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. பெரும்பாலும் செல்லிடத் தொலைபேசியினை ஜீன்ஸ் பொக்கற்றில் தொடர்ந்து வைத்திருப்பதால் RF கதிர் வீச்சு கரரணமாக விதைக் கலங்கள் பாதிக்கப்படுவதனால் அவர்களில் உருவாக்கப்படுகின்ற

விந்துக்களின் எண்ணிக்கை (SPERM COVNT)

அசையும் திறன் (SPERM MOTILITY)

வைத்தியகலாநிதி
எஸ்.சிவசுப்பிரமணியம் (பி.எஸ்.எம்.எஸ்)
சஞ்சீவி சிகிச்சை நிலையம்,
கொக்குவில் மேற்கு

உயிர்வாழும்தன்மை (SPERM VIABILITY)

ஆகியன குறைவடைவதாகவும் உருவவியலில் மாறுபாடுள்ள விந்துக்கள் (CHANGE OF NORMAL MORPHOLOGY) உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இது மலட்டுத்தன்மைக்குக் காரணமாக அமைவதுடன் இவ்வாறான ஒருவருக்குப் பிறக்கின்ற குழந்தை குறைபாடுடைய தாகவோ புற்றுநோய்த்தாக்கத்திற்கு ஆளாகக் கூடிய ஒருவராக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

(www.controlyourimpact.com)

(தொடரும்)

ஒரு மனிதனுடைய செயல் அவனுடைய – பெருமை அல்லது சிறுமையின் உரைகல்.

– இந்தியா

வலம்புரி

## யாழ். மாநகர சபையின் முன் பாரிய பொறுப்புகள்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராக திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், பிரதி மேயராக இளங்கோவும் நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுள்ளனர்.

நீண்டகாலத்திற்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று யாழ். மாநகரத்துக்கான புதிய சபை தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் மூழ்கிப் போயிருந்த யாழ். மாநகரத்தை காலத்துக்குக்காலம் பதவியில் இருந்த ஆணையாளர்கள் சிறப்பாக வழிப்படுத்தி வந்தனர் என்பதை எவரும் மறந்து விடலாகாது.

இருக்கக்கூடிய மிகக் குறைந்த வளங்களை பயன்படுத்தி பணியாளர்களின் ஒத்துழைப்புடன் மாநகர ஆணையாளர்கள் ஆற்றிய–ஆற்றி வரும் பணிக்காக யாழ். மாநகர மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

அதேநேரம் இப்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை யாழ். மாநகரத்தின் பணியை பொறுப்பேற்றுள்ளது.

இந்த பொறுப்பேற்பு அரசியல் தன்மையுடன் கலந்தமையால் நிர்வாக ரீதியான முரண்பாடுகளை சந்திக்கும் சூழமைவும் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

எனவே இங்குதான் யாழ். மாநகர சபையின் மேயராகவும், பிரதி மேயராகவும் பதவி ஏற்றுள்ளவர்களின் ஆளுமைத்திறன் வெளிப்பட வேண்டும்.

அதாவது அரசியல் என்ற சாகரம் திறமையை –நேர்மையை தட்டிவிடுமாக இருந்தால் முன்னெடுக்கும் பணிகள் வெற்றி தரமாட்டா தென்ற தத்துவம் விலக்கப்படாத சிந்தனை ஓட்டமாக இருக்க வேண்டும்.

அதே சமயம் பணியில் ஆர்வம் இல்லாதவர்கள், தத்தம் கடமைகளை பொறுப்பாக செய்யாதவர்கள், வால்பிடிக் கலாசாரவலையை வீசி மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையை வழி நடத்த முற்படுவர்.

இத்தகையவர்களின் கை மேலெழுகை பெறுமாயின், திறமையான அதிகாரிகளை–பணியாளர்களை புறந்தள்ள வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்படுவதுடன், பணியாளர்களின் ஒத்துழைப்பையும் பெறமுடியாமல் போகும். எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள மாநகர சபைக்கான பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புவதில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். அதற்கான திட்டமிடல்கள் தேவை.

கடந்த காலங்களில் யாழ். மாநகரத்திற்கு பொருந்தாத திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் இன்றுவரை சில அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியாத நிலையில் யாழ். மாநகர நிர்வாகம் திண்டாடுகின்றது.

இத்தகைய பொருந்தாத திட்டங்களின் நடைமுறைகள் மாநகர சபை உறுப்பினர்களின் செல்வாக்கில் விளைந்த தீமைகள் என்பதை புதிய பிரதிநிதிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

அழகான மாநகராக யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புவோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தேர்தல் பிரசாரத்தில் கூறியதை நினைவிற் கொண்டு யாழ். மாநகர சபையின் புதிய மேயர், பிரதிமேயர் மற்றும் பிரதிநிதிகள் செயலாற்ற வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

# தமிழக எம்.பிக்களின் பயணத்தின் மூலம் சாதகமான அறிக்கையைப் பெற அரசு திட்டம்

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான 5 நாள் பயணம் மேற்கொண்டு வந்துள்ள தமிழ் நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு வடபகுதியில் உள்ள முகாம்களுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவதையிட்டு வரவேற்புத் தெரிவித்திருக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்,தமக்கு சாதகமான அறிக்கை ஒன்றை இவர்களின் பயணத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்வது தான் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கும் எனவும் குறிப் பிட்டிருக்கின்றார். உண்மை நிலைமைகளை மூடி மறைப் பதற்கு அரசு முயற்சிக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இடம் பெயர்ந்த முகாம்கள் தொடர்பாக ஆராய்ந்து அங்குள்ள உண்மையான நிலை தொடர்பாக சுயாதீனமாக அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் எனவும் மனோ கணேசன் தமிழ் நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கோரியிருக்கின்றார்.



இடம்பெயர்ந்த மக்க ளின் அவல நிலையைப் புரிந்து கொள்ளுமாறு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டுள்ள மனோ கணேசன் இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் சமாதானமாக வாழக்கூடிய ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதைத் தான் விரும்புகின்றார்கள் எனவும் சுட்டிக்காட் டினார்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை இன்று செவ்வாய்க்கிழமை தான் சந்திக்கவிருப்பதாகவும் இச் சந்திப்பின் போது இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை கள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கிக் கூறவிருப்பதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார். (ஓ-6)

# பிரதான தேர்தலொன்றுக்கு தயாராகுமாறு கட்சிஅமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

பிரதான தேர்தல் ஒன்றிற்குத் தயாராகுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆலோசனை வழங்கியுள்ளதாக தகவல்க்ள் தெரிவிக்கின்றன.

தென்மாகாண சபைத்தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களையும் அமைப்பாளர்களையும் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி அலரி மாளிகையில் சந்தித்துப்பேச்சு நடத்தியதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன்போது விரைவில் பிரதான தேர்தல் ஒன்றுக்கு தயாராகுமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பெரும்பாலும் பொதுத் தேர்தல் ஒன்று நடப்பதற்கான சாத்தியங்களே அதிகமுள்ளதாகவும் அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரிமாதம் ஜனாதிபதித் தேர்தலும் மார்ச் மாதமளவில் பொதுத்தேர்தலும் நடைபெறும் என்று அரசாங்க அமைச்சர்கள் அண்மைக் காலமாக தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையில் நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 67 வீதமான வாக்குகளை பெற்று வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# சட்டவிரோத குடியேறிகளை தங்க வைக்க ஆஸி.டார்வின் முகாம் வசதிகள் அதிகரிப்பு

## ஆஸி.குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சென்ற சட்ட விரோதக் குடியேறிகளைத் தங்க வைப்பதற்காக அவுஸ்திரேலியாவின் டார்வின் முகாமில் வசதிகளை அதிகரிக்க இருப்பதாக அவுஸ்திரேலியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய வானொலிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த முகாமில் 400 அகதிகள் தங்க வைக்கப் பட்டுள்ளனர். சட்டவிரோதக்குடியேறிகள் தங்க வைக்கப்படுகின்ற கிறிஸ்மஸ் தீவில் நெருக்கடி நிலை அதிகரிக்கும் பட்சத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித் தார்.

இதுவரை சுமார் ஆயிரத்து 500 சட்டவிரோதக் குடியேறிகள் கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் இருந்து அதிக அளவில் வரும் சட்ட விரோதக் குடியேறிகள் தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித் துள்ளார்.

இதற்கிடையில் அண்மையில் அவுஸ்திரேலிய கடற் பிரதேசத்தில் வெடித்துச் சிதறிய படகொன்றில் இருந்த 42 அகதிகளுக்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் பாதுகாப்பு விசாக்களை வழங்கியுள்ளது. இந்தப் பாதுகாப்பு விசாக்கள் கிடைக்கப் பெற்றவர்கள் இந்த வாரம் அவுஸ்திரேலிய சமூகத்துடன் இணைக்கப்பட்டு விடுவார்கள் என கிறிஸ்இவன்ஸ் தெரிவித்தார்.

இந்த 42 பேரும் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரி கைது

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவ தலைமைக் காரியாலயத்தில் பயங் கரவாதிகளால் பணய மாக வைக்கப்பட்டிருந்த குழுவினரை படையினர் விடுவித்த போது கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகளில் இலங்கை கிரிக்கெட் வீரர்களை தாக்கிய சம்பவத்தின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படுபவரும் அடங்கியிருப்பதாக பாகிஸ்தான் அசோசியேட் டெட் பிறெஸ் தெரிவித் துள்ளது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது காயங்க ளுடன் கைது செய்யப்பட்ட பயங்கரவாத கொமாண்டோ டாக்டர் உஸ்மான் என்று அழைக்கப் படும் அக்கீல் என்பவர் பாகிஸ் தானில் வைத்து இலங்கை கிரிக் கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரி என்று நம்பப்படுவதாக பொது ஜன உறவு சேவைகள் பேச்சாளர் மேஜர் ஜெனரல் அதார் அப்பாஸ் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## மனதின் ஆற்றல்கள்



மனித சமுதாயத்தின் வரலாற்றில் தெய்வத்தின் தூதுவர்களாக ஆசாரியர்கள் தோன்றுவதையும் பிறந்தது முதல் அவர்கள் தங்களது வாழ்க்கை நோக்கம் முழுவதும் ஏற்கனவே முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருக்கிறது .அதிலிருந்து இம்மியளவும் அவர்கள் பிறழாதிருப்பதை நீ காண்பாய்.

ஏனென்றால் ஒரு குறிக்கோளுடன் மக்களுக்குத் தருவதற்கான ஒரு செய்தியுடன் அவர்கள் வருகிறார்கள். அவர்கள் பேசும் போது ஒவ்வொரு சொல்லும் நேரிடையாகத் தாக்குகிறது. அது ஒரு வெடிக்குண்டைப் போல வெடிக்கிறது. சொல்லுக்குப் பின்னால் சக்தி இல்லாவிட்டால் அதில் என்ன பயன் இருக்கிறது.

# வடமாகாண தமிழ் இலக்கிய விழா -2009


வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2007 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்ட நூல்களுக்கான விருது அண்மையில் நடைபெற்ற வடமாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் இலக்கியமும் ஆய்வு விமர்சனமும் துறையில் "பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை" எனும் நூலுக்குரிய விருதை கலாநிதி செ.யோகராசாவும் உயர்கல்வி துறையில் "முகாமை நுட்பங்கள்" எனும் நூலுக்கான விருதை பேராசிரியர் மா.நடராஜசுந்தரமும் கவிதை துறையில் "அந்தரத்து உலாவுகின்ற செய்தி" எனும் நூலுக்கான விருதை ஸ்ரீபிரசாந்தனின் சார்பில் அவரது தாயாரும் பெற்றுக்கொள்வதைப் படங்களில் காணலாம்.

## ஜனாதிபதியைச் சந்திக்க வருமாறு புலம்பெயர் இலங்கையர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்ய விரும்பும் புலம் பெயர் புத்தி ஜீவிகள், தொழில் முயற்சியாளர்கள், தொழில் புலமையாளர்கள் ஆகியோரையும் மற்றவர்களையும் அடுத்த மாதம் ஜனாதிபதியைச் சந்திக்க வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

கனடாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயம் அங்குள்ள இலங்கையர்களுக்கு விடுத்துள்ள அழைப்பு ஒன்றில் நவம்பர் மாதம் 14ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் உங்களை சந்திக்கவிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய விரும்பும் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள புத்தி ஜீவிகள், தொழில் முயற்சியாளர்கள், தொழில் புலமையாளர்கள் ஆகியோரையும் மற்றவர்களையும் சந்தித்து அவர்களுடன் பேச ஜனாதிபதி ஆவல் கொண்டுள்ளார் என்று அழைப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாடு பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்டவுடனும் இலங்கையில் 61ஆவது சுதந்திர தின ஞாபகார்த்த உரையின் போதும் பயங்கரவாத அட்டூழியங்கள் காரணமாக நாட்டை விட்டுச்சென்றவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதிக்கு அமைய இந்த அழைப்பு விடுக்கப்படுவதாக தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பில் கலந்துகொள்வோர் அனைவரும் வங்கி நிதி முதலீட்டு நிறு வனங்கள், சுற்றுலாத் துறை மற்றும் பல அரசாங்க, தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடும் வசதிகளும் ஒழுங்கு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## வாய்சுகாதாரம் பேணப்படாமையால் வாய் சார்ந்த நோய்கள் அதிகரிப்பு

### பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்

(கொழும்பு)

இலங்கை 75 வீதமான சிறுவர்கள் வாய் சார்ந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன் முதியவர்களில் 90 வீதமானோர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் வாய் மற்றும் பல் வைத்தியர் விசேட நிபுணருமான ரூவான் துமிந்தஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 12 வீதமான சிறுவர்கள் பற்தூரிகை பாவிக்காமையே இதற்குக் காரணம் என வைத்தியர் மேலும் கூறினார். 5 வயதுக்குக்குறைந்த 60 வீதமான சிறுவர்கள் பற்சூத்தை மற்றும் பல்வேறு பட்ட பல் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

12 வயதிற்குக்குறைந்த 35 வீதமான சிறுவர்கள் மற்றும் 15 வயதிற்குக் குறைந்த 43 வீதமான சிறுவர்கள் பற்சூத்தையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் ரூவான் துமிந்த ஜெயசிங்க மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் பாடசாலை மாணவர்களிடையே 100இற்கு 80வீதமானோரின் பற்கள் உறுதி இழந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் புற்றுநோயி னால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் 100இற்கு 20 வீதமானோர் வாய் புற்று நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராமப்புறமக்கள் மத்தியில் வாய் சுகாதா ரம் தொடர்பான போதிய விளக்கம் இன்மை யால் அந்தப் பகுதிகளில் அதிகளவு இந்த நோய் காணப்படுகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6-4)

## யுத்தம் முடிவடைந்தாலும் படையினரின் கடமைகள் இன்னமும் முடிவடையவில்லை

### இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் படையினரின் கடமைகள் இன்னமும் நிறைவடையவில்லை என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான மீட்புப் பணிகளின் போது மீட்கப்பட்ட அப்பாவி பொதுமக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த படையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ சேவை ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முழு உலகையும் வியக்கச் செய்த யுத்த வெற்றிகளை ஈட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளுமை மிக்க தலைமைத்துவம் பாரிய உந்து சக்தியாக அமைந்ததென அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24.01.1924 மறைவு: 13.10.1984

**அமரர் அ.சிவராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

**நீதி நெறி வழுவா நின்றன் நிழலிலே வளர்ந்த நாங்கள்**
**நிமிர்ந்துமே நிற்றல் காணா(து) நீவீரேன் மறைந்தீர் ஐயா?**
**கூடியே உங்களோடு குதூகலித்திடாத சோகம்**
**சாடுதே உள்ளம் தன்னில் தணியாத தாகமாக.**

15/4, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி லீலாவதி
மக்கள்–சிவமோகன், சிவசீலன், சிவஜீவன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(3777)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளராக இருந்து (1996–1998) இடரான காலப் பகுதியில் கல்லூரியின் நலனுக்காக உழைத்த

### திரு. சிவசிதம்பரம் சிவானந்தர்

அவர்களின் எதிர்பாராத மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(3778)

# சேவாக், கார்த்திக் அதிரடி டில்லி டேர்டேவில்ஸ் வெற்றி



(புதுடில்லி)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டியில் சேவாக், தினேஷ் கார்த்திக் அதிரடியாக அரைச் சதம் கடக்க டில்லி டேர்டேவில்ஸ் அணி, வயம்ப அணியை 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இதன் மூலம் சுப்பர்-8 வாய்ப்பை டில்லி அணி தக்க வைத்துக் கொண்டது. சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் நடக்கின்றது.

இதில் நேற்று முன்தினம் டில்லியில் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் இந்தியாவின் டில்லி டேர்டேவில்ஸ், இலங்கையின் வயம்ப அணிகள் மோதின.

டில்லி அணியில் பிரதீப் சங்வான் நீக்கப்பட்டு மெக்ராத் வாய்ப்புப் பெற்றார். காயம் அடைந்த மன்ஹாசுக்கு பதிலாக மனோஜ் திவாரி இடம்பெற்றார்.

ஏற்கனவே விக்டோரியா அணியிடம் தோல்வியடைந்த டில்லி அணி, இப்போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற அணித் தலைவர் காம்பீர் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

### சேவாக் அரைச் சதம்

ஆரம்பத்தில் வெலிகெதரா, உதான வேகத்தில் டில்லி அணி திணறியது. உதான வீசிய ஆட்டத்தின் 4-வது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்து ஓட்ட வேட்டையை ஆரம்பித்தார் சேவாக்.

மறுமுனையில் மந்தமாக ஆடிய டில்சான் 10 ஓட்டங்களுக்கு (16 பந்து) வெளியேறினார். மெண்டிஸ் சுழலில் காம்பீர் (3) வீழ்ந்தார். இதற்குப் பின் தினேஷ் கார்த்திக் கம்பனி கொடுக்க சேவாக் அதனது அதிரடியைத் தொடர்ந்தார்.

பவுண்டரி மழை பொழிந்த இவர் மின்னல் வேகத்தில் அரைச்சதம் கடந்தார். 10 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட 66 ஓட்டங்களை எடுத்து துரதிர்ஷ்டவசமாக ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

### ஹட்ரிக் சிக்ஸர்

பின்னர் தினேஷ் கார்த்திக் கலக்கினார். மெண்டிஸ் வீசிய 19-வது ஓவரின் முதல் 3 பந்துகளில் தொடர்ந்து 3 சிக்ஸர்கள் விளாசினார். வைடாக வீசப்பட்ட 5-வது பந்தை அடிக்கப் பார்த்த இவர் தடுமாறி கீழே விழுந்தார்.

இதனைப் பயன்படுத்திக் கொண்ட விக்கெட் காப்பாளர் டிஜொய்சா ஸ்டம்ப்சை தகர்க்கக் கார்த்திக் 61 ஓட்டங்களுக்கு (5 பவுண்டரி, 3 சிக்ஸர்) ஆட்டமிழந்தார்.

ஓ வைஸ்ஷா 18 ஓட்டங்கள் எடுத்தார். டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 170 ஓட்டங்கள் எடுத்தது. மனோஜ் திவாரி (3), பாட்டியா (5) ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

### நான்ஸ் அசத்தல்

சவாலான இலக்கை விரட்டிய வயம்ப அணி நான்ஸ் பந்து வீச்சில் சரிந்தது. மறுபக்பம் மெக்ராத்தும் போட்டுத் தாக்க கடைசி வரை மீள முடியவில்லை.

நான்ஸ் வேகத்தில் உதவாட்டே (2), வாண்டேர் (9), மகரூப் (3) வெளியேறினர். மெக்ராத் பந்து வீச்சில் முபாரக் (0) லொக்கு ஆராய்ச்சி (4) ஆட்டமிழந்தனர்.

போராடிய ஜெயவர்த்தன 53 ஓட்டங்கள் எடுத்தார். வயம்ப அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 120 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துத் தோல்வியடைந்தது.

டில்லி டேர்டேவில்ஸ் அணி சார்பில் நான்ஸ் அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதை சேவாக் தட்டிச் சென்றார்.

## 100 வயதில் தங்கப் பதக்கம் வென்றார் ஆஸி.மூதாட்டி

(சிட்னி)

உலகமுதியோர் விளையாட்டுபோட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடக்கும் இந்த போட்டியில் 24 முதல் 101 வயதிலான பிரிவினருக்கு போட்டிகள் நடக்கின்றன.

95 நாடுகளைச் சேர்ந்த 28ஆயிரத்து 292 வீரர் வீராங்கனைகள் சிட்னியில் குவிந்துள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டிகளில் எல்லோரையும் கவர்ந்தவர் அவுஸ்திரேலிய வீராங்கனை ரூத் பிரித். காரணம் அவரது வயது100. இந்த வயதிலும் மனம் தளராமல் போட்டி களத்தில் குதித்து உள்ளார். குண்டு எறிதல் போட்டியில் 100 முதல் 104 வயதினருக்கான பிரிவில் அவர் பங்கேற்றார்.



ஆனால் இப்பிரிவில் பங்கேற்ற ஒரே வீராங்கனை அவர்தான். இதனால் போட்டியின்றி அவர் தங்கப்பதக்கம் வென்றார். இருப்பினும் அவர் 4.07மீற்றர் தூரம் குண்டு எறிந்தார்.

பதக்கம் வென்றதும் மதுவகைகளுடன் வெற்றியை கொண்டாடலாம் என்று போட்டி அமைப்பாளர்கள் ரூத் பிரித்தை அழைத்த போது அவர் மது,சிகரெட் குடிக்கும் பழக்கம் தனக்கு கிடையாது என்று மறுத்து விட்டார்.

மதுவகைகளுடன் வெற்றியை கொண்டாடும் இந்த நவநாகரிக பாணி தனக்குரியதல்ல என்றும் அவர் கூறினார். இந்த வயதிலும் ஆரோக்கியமுடன் இருக்கும் ரூத்பிரித்தின் உணவுமுறையில் ஒரு ஆச்சரியமான விஷயம் உண்டு.

அதாவது சிறு வயது முதலே அவர் ஒரு போதும் காய்கறி வகைகளை சாப்பிட்டதில்லையாம். போட்டிகளில் மகிழ்ச்சியுடன் பங்கேற்று வருகிறேன். ஓய்வு பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என்று கூறி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார் இந்த செஞ்சரி மூதாட்டி.

## இந்தியாவுடனான தொடரில் மைக்கெல் கிளார்க் நீக்கம்

(புதுடில்லி)

இந்தியாவுடனான 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

காயம் காரணமாக அவுஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் மைக்கெல் கிளார்க் நீக்கப்பட்டு, அப்பதவி மைக் ஹஸிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மைக்கெல் கிளார்க் முதுகு பகுதியில் காயம் ஏற்பட்டதை அடுத்து சமீபத்தில் முடிந்த சம்பியன்ஸ் கிண்ண தொடரின் பாதியிலே நாடு திரும்பிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைத் தொடர்ந்து விக்கெட் காப்பாளர் பீரட் ஹடின், நாதன் பிரக்கன் ஆகியோரும் இத்தொடரில் இடம்பெறவில்லை.

## ஓரம் ஓய்வு பெறத் திட்டம்

(சிட்னி)

நியூசிலாந்து அணியின் சகல துறை வீரர் ஜேக்கப் ஓரம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவது பற்றி பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

31 வயதாகும் ஜேக்கப் ஓரம் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றார். சமீபத்தில் சம்பியன்ஸ் தொடரிலிருந்து அவர் விலக நேர்ந்தது.

இந்த நிலையில் அவர் ஓய்வு பெறுவது பற்றி தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகின்றது. ஐ.பி.எல். அமைப்பில் ஓரம் சென்னை அணி சார்பில் விளையாடி வருகின்றார்.

இதுதொடர்பாக ஜேக்கப் ஓரம் கூறுகையில்,

சமீபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாகச் சம்பியன்ஸ் தொடரில் விளையாட முடியாமல் போனது எனது மனதுக்கு மிகுந்த வேதனையளித்தது.

இந்த தொடர் முக்கியமானதாகும். இந்தத் தருணத்தில் நான் எனது வருங்காலம் குறித்து முடிவு செய்ய நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது. எனக்கும் நியூசிலாந்து அணிக்கும் எது நல்லது என்பது குறித்துச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும் என்றார்.

## 2020 இல் ஒலிம்பிக்கை நடத்த அணுகுண்டு நகரங்கள் முயற்சி

(யப்பான்)

2-வது உலகப் போரின் (1945) கடைசி கட்டத்தில் அமெரிக்கா வீசிய அணுகுண்டு வீச்சினால் யப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் பூண்டோடு அழிந்தன.

தற்போது அந்த நகரங்கள் பாதிப்பிலிருந்து மீண்டு நல்ல வளர்ச்சி பெற்றுள்ளன. அந்த இரண்டு நகரங்களும் 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை இணைந்து நடத்த விண்ணப்பிக்க முடிவு செய்துள்ளன.

உலக அமைதியை வேண்டியும் அணு ஆயுதத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஒலிம்பிக் போட்டியை நடத்தினால் நல்ல பலன் அளிக்கும். எனவே இந்தப் போட்டியை நடத்த விரும்புவதாக ஹிரோஷிமா மேயர் தடாடோஷி அகிபா தெரிவித்துள்ளார்.

## சுப்பர்-8 சுற்றில் நியூ சவுத் வேல்ஸ் அணி

(புதுடில்லி)

சம்பியன்ஸ் லீக் போட்டியில் ஹயூஸ், ஹென்ரிக்ஸ் அரைச் சதம் கைகொடுக்க நியூ சவுத் வேல்ஸ் அணி, சசக்ஸ் அணியை 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

தொடர்ந்து 2 வெற்றிகள் பெற்ற சவுத் வேல்ஸ் அணி சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது. சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் நடக்கின்றது. இதில் 7 நாடுகளிலிருந்து 12 அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று முன்தினம் டில்லியில் நடந்த பி பிரிவு லீக் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ், இங்கிலாந்தின் சசக்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூ சவுத் வேல்ஸ் அணித் தலைவர் கடிச் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.



### ஹென்ரிக்ஸ் அதிரடி

நியூ சவுத் வேல்ஸ் அணி வீரர் வோர்னர் 14 ஓட்டங்களுடன் இம்முறையும் சாதிக்கவில்லை. பியூஸ் சாவ்லா சுழலில் டேனியல் ஸிமித் 2 ஓட்டங்களுக்கு சிக்கினார். பின்னர் ஹயூசுடன் இணைந்தார் ஹென்ரிக்ஸ். 10 ஓவர்கள் வரை நிதானம் காட்டிய இந்த ஜோடி சாவ்லா வீசிய 2-வது ஓவரில் 2 சிக்ஸர்கள் அடித்து அதிரடிக்கு மாறியது.

33 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்ஸர் உதவியுடன் ஹென்ரிக்ஸ் அடித்த அரைச் சதம் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த உதவியது.

மறுமுனையில் பொறுமையாக ஆடிய ஹயூசும் அரைச் சதம் அடித்தார். நியூ சவுத் வேல்ஸ் அணி 20 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் எடுத்தது. ஹயூஸ் 62 ஓட்டங்களுடனும் ஹென்ரிக்ஸ் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### மோசமான ஆரம்பம்

எளிய இலக்கை விரட்டிய சசக்ஸ் அணிக்கு முதல் ஓவரிலேயே பிரட் லீ அதிர்ச்சி கொடுத்தார். இவரது வேகத்தில் அணித் தலைவர் ஜாய்ஸ் (0) வெளியேறினார். களத்தடுப்பும் சிறப்பாக அமைய சசக்ஸ் அணி ஓட்டங்கள் எடுக்கத் திணறியது. ஹமில்டன் 13 ஓட்டங்களுடனும் டுவைன் சிமித் 13 ஓட்டங்களுடனும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.


### ஹென்ரிக்ஸ் அபாரம்

சற்று நேரம் போராடிய நாஷ் (24), ஹென்ரிக்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். இதே ஓவரில் பியூஸ் சாவ்லாவும் (0) வெளியேறினார். பின்னர் வந்த யசிர் அரபாத் (1), ஹோட் (12) சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்த சசக்ஸ் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 95 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து பரிதாபமாகத் தோல்வியடைந்தது. ஹென்ரிக்ஸ் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். இவரே ஆட்டநாயகன் விருதையும் வென்றார்.

தொடர்ந்து இரு வெற்றிகள் பெற்ற நியூ சவுத் வேல்ஸ் அணி சுப்பர் - 8 சுற்றுக்குள் நுழைந்தது.

### தலையைத் தாக்கிய பந்து

நியூ சவுத் வேல்ஸ் அணி துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது 19-வது ஓவரை டுவைன் சிமித் வீசினார். இதன் முதல் பந்தை புல் டாசாக வீச அது நேரடியாக விக்கெட் காப்பாளர் அன்டி ஹோடின் ஹெல்மெட்டைப் பலமாகத் தாக்க அப்படியே சுருண்டு விழுந்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் ஹோடின் சுதாகரித்து எழுந்ததால் பதற்றம் தணிந்தது.




யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதிமேயர் இளங்கோ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தெரிவாகிய உறுப்பினர்கள்பதவியேற்றபின் ஜனாதிபதியுடன் இணைந்து நிற்பதையும் யாழ். மாநகரசபை முதல்வர் ஜனாதிபதிக்கு கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம்.

## ஈழத்தமிழர் விடயத்தில் பக்கசார்பாக நடக்கக்கூடாது இந்திய பொதுவுடமை மார்க்சியக் கட்சி தெரிவிப்பு

ஈழத் தமிழர்களின் நிலைமையை அறிந்து வருவதற்காக ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் அனுப்பி வைத்தது இந்திய மத்திய அரசின் பக்க சார்பான நிலையைக் எடுத்துக் காட்டுவதாக இந்திய பொதுவுடமை மார்க்சியக் கட்சி கண்டனம் தெரிவித்துள் ளது. இது தொடர்பாக அக் கட்சி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தமிழ் நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான அதிமுகவைக் கூட கலந்தாலோசிக்காமல் இலங்கை செல் வதற்கான குழுவை மத்திய அரசு தேர்வு செய் துள்ளது என அது குற்றம் சுமத்தியுள்ளது. (ந-5)

## யாழ்ப்பாணத்...

வதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்படும். அத்துடன் நாட்டில் சகல இனமக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய வகையில் 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் மேலதிகமான அதிகாரங்களுடன் அரசியல் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## பருவ மழையால் முகாம் மக்...

முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள் 180 நாட்களுக்குள் இந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக அரசு உறுதியளித்து 5 மாதங்கள் கடந்து விட்டபோதும் 2 இலட்சத்து 55ஆயிரம் மக்கள் இன்னமும் அடைபட்டே கிடக்கிறார்கள். பருவ மழைகாலம் நெருங்கிவிட்ட நிலையில் முகாம்களில் உள்ள மக்களில் உயிர்களுக்கு ஆபத்து என மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கின்றன.

அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு, நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அண்மையில் குரல் கொடுத்திருந்தது. மோசமான நிலையில் உள்ள இந்த முகாம்களில் தேவையற்ற விதத்தில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் அங்கு பதற்றமும் அமைதி இன்மையும் அதிகரிக்கின்றது.

பருவமழைக்கு முன்பாக அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால் அவர்களின் உயிருக்கும் உடல் நலத்திற்கும் பெரும் ஆபத்து ஏற்படும் என்று தெரிவித்தார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிரிவு இயக்குநர் பிறட் அடம்ஸ்.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட மழையின் போது பாதிப்புக்கள் ஏற்பட்டன என்பதை ஏற்றுக்கொண்ட ரஜீவ விஜயசிங்க, அதற்கு ஐக்கிய நாடுகளின் சபையின் நிறுவனங்களே பொறுப்பு என்று விமர்சித்த அவர் தற்போது நிலைமைகள் மேம்படுத்தப்பட்டன எனவும் குறிப்பிட்டார்.

ஆனால் ரஜீவ விஜயசிங்கவின் கருத்துக் குறித்துப் பதிலளித்த மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மூத்த ஆய்வாளர் அன்னா நெய்ஸ்டாட், பருவ மழையை எதிர் கொள்வதற்கு முகாம்கள் தயாராக உள்ளன என்பதை நம்புவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை என்று தெரிவித்தார்.

கடந்தமாதம் முழுவதும் அரசு பல்வேறுபட்ட விடயங்களை சொல்லி வருகிறது. உதாரணமாக, மக்கள் விடுவிக்கப்படுவார்கள், மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள், முகாம்களின் நிலை அனைத்துலக தரத்திற்கு உயர்த்தப்படும் போன்ற வாக்குறுதிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன ஆனால் அவற்றில் ஒன்று கூட உண்மையாகியது இல்லை என்றார் அவர்.

அரசின் உண்மைக்கு மாறான வாக்குறுதிகள் இனியும் எவரையும் ஏமாற்ற முடியாது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ந-5)

## தீவகத்தைச் சேர்ந்த 657....

சொந்த இடமாகக் கொண்ட 21 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேரும் வேலணையை சொந்த இடமாகக் கொண்ட 91 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேரும் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர்.

அத்துடன் காரைநகர் இடைத்தங்கல் முகாம்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் காரைநகரைச்சேர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேரும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 43 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேரும் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்படுவர். யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிர தீபன் தலைமையிலான குழுவினர் நேற்று வவுனியாவிலிருந்து அழைத்து வந்ததாகவும் தீவகத்தைச் சேர்ந்த மேலும் 650 பேரை நாளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரு வதற்காக யாழ். செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் எஸ்.சுதர்சன் தலை மையிலான குழுவினர் இன்று வவுனியா புறப்படுவ தாகவும் யாழ். அரச அதிபர் குறிப்பிட்டார். (ந-5)

## யாழ். மாநகர சபை முதல்....

ஆகியோரும் பதவியேற்றனர்.

பதவிப்பிரமாணம் மேற்கொண்டதன் பின்னர் இந்நிகழ்வில் முக்கிய உரையாற்றிய யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா; ஒரு தந்தையிடம் பிள்ளை எவ்வளவு உரிமையுடன் தனது தேவையினை கேட்டுப் பெற்றுக்கொள்ளுமோ அதே உரிமையுடன் யாழ். மக்கள் சார்பில் ஜனாதிபதியிடம் எமது தேவைகளை கேட்டுக்கொள்ளுகின்றோம் என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தனது அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும், என்றும் கிடைக்கும் என தெரிவித்துக்கொண்டார். நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா சுசில் பிரேம ஜெயந்த், நிமால் சிறிபால டி சில்வா, ரிசாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோருடன் சர்வமதத் தலைவர்களும் யாழ்ப் பாணத்திலிருந்து வருகை தந்திருந்த பல்துறை சார்ந்த பிரமுகர்களும் பங்குகொண்டனர். (ச-5)

## படைக்கான பணி முடிந்துவிட...

தரைப்படையின் 60ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர், படையினருக்கும் படை அதிகாரிகளுக்கும் மத்தியில் தான் இப்படி உரையாற்றுவது இதுவே கடைசித்தடவையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

படைத்துறை சேவையில் நான் இருக்கின்ற போதும் தரைப்படைக்கான எனது கடமைகளையும் பொறுப்புகளையும் அர்ப்பணிப்புக்களையும் நான் நிறைவு செய்து விட்டேன். இப்போது வேறு உயரங்களை நான் தொட்டிருக்கின்றேன்.

40 வருட எனது சேவைக்காலத்தில் தரைப்படைக்கு தேவையான எனது பங்கை நான் ஆற்றியிருக்கின்றேன். 30 வருடங்களாக நீடித்த போரை வெற்றிபெறுவதற்கு தரைப்படையினருக்கு. நான் தலைமைத்துவத்தை வழங்கியதன் மூலம் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்துடன் எனது கடமையை ஆற்றியிருக்கின்றேன் என்றார் பொன்சேகா.

தரைப்படை நிகழ்வில் சரத் பொன்சேகா இவ்வாறு பேசியிருப்பது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை கிளப்பியுள்ளது.

சரத்பொன்சேகாவுக்கு அரசு வழங்கிய விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பதவியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பதவி அவர் நாட்டுக்கு ஆற்றிய சேவையை இழிவுபடுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கான பொது வேட்பாளராக சரத்பொன் சேகாவை இழுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியலில் ஈடுபடுவதற்கு தனக்கு விருப்பம் இல்லை என்று பொன்சேகா தொடர்ந்து சொல்லி வருகின்ற நிலையிலும் அவரை அரசியலுக்குள் இழுப்பதற்கான முயற்சிகள் எதிரணித்தரப்பில் இருந்து மட்டும் மல்லாது அரசுதரப்பில் இருந்தும் மேற்கொள்ளப்படுகிறது.

அண்மையில் பொன்சேகாவை சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஒருவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் தேர்தலில் போட்டியிடுமாறு அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் அவர் அதனையும் மறுத்துவிட்டார். (ந-5)

## கொழும்பில்...

எட்டியாவத்தை சந்தியில் ஒரு இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக எட்டியாவத்தை சந்தியில் பொலிஸாரும் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

## வலி. உயர்பாது...

இம் மீள்குடியேற்ற நடவடிக் கை இடம்பெற வேண்டும் என அரசாங்கம் உரிய அதிகாரிகளிடம் கேட்டுள்ளது.

இதனையடுத்து படையினர் கே.கே.எஸ். வீதிக்கு மேற்குப் புறமாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வரையுள்ள உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் மக்களை மீள் குடியேற்றுவதற்கானநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ந-5)




இப்பத்திரிகை வல... ...ா.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.